*கவனிக்க.- 2023.01.27 ஆந் திகதிய 2317 ஆம் இலக்க இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானியின் பகுதி* II *(தமிழ்மொழி மூலம்) மற்றும் பகுதி* IV*(அ) பிரசுரிக்கப்படவில்லை.*

# ශ්‍රී ලංකා ප්‍රජාතාන්ත්‍රික සමාජවාදී ජනරජයේ ගැසට් පත්‍රය
# இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானப் பத்திரிகை


අංක 2318 - 2023 පෙබරවාරි මස 03 වැනි සිකුරාදා - 2023.02.03

*2318 ஆம் இலக்கம் - 2023 ஆம் ஆண்டு பெப்புருவரி மாதம் 03 ஆந் திகதி வெள்ளிக்கிழமை*

(அரசாங்கத்தின் அதிகாரத்துடன் பிரசுரிக்கப்பட்டது)


## பகுதி I : தொகுதி (IIஅ) - விளம்பரங்கள்

(ஒவ்வொரு மொழியின் ஒவ்வொரு பகுதியும் வெவ்வேறாக கோவை செய்து வைப்பதற்காகத் தனித்தனிப் பக்கங்களில் தரப்பட்டுள்ளன.)


| | பக்கம் |
|---|---|
| பதவிகள் - வெற்றிடம் | 174 |
| பரீட்சைகளும் பரீட்சைப் பெறுபேறுகளும் பிறவும் | 175 |


**வாராந்த வர்த்தமானிகளிற் பிரசுரிப்பதற்கான அறிவித்தல்கள் ஏற்றுக்கொள்ளல் சம்பந்தமான**

**முக்கிய அறிவித்தல்கள்**

இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வாராந்த வர்த்தமானப் பத்திரிகைகளின் இறுதியில், ஒவ்வொரு மாதத்தின் முதல் வாரத்தின், வாராந்த வர்த்தமானப் பத்திரிகைகளில் பிரசுரிக்கப்படுவதற்கான அறிவித்தல்கள் ஏற்றுக்கொள்ளப்படும் இறுதித் திகதியும் நேரமும் சம்பந்தமான அறிவித்தல்களுக்கு கவனம் கோரப்படுகின்றது.

வாராந்த வர்த்தமானிகளிற் பிரசுரிக்கப்படுவதற்கான அறிவித்தல்கள் ஏற்றுக்கொள்ளப்படும் இறுதித் தினம் அவை **வர்த்தமானியில் பிரசுரமாகும் திகதிக்கு இரண்டு வாரங்களுக்கு முந்திய வெள்ளிக்கிழமை, நண்பகல் 12.00 மணியாகும்.** இறுதித் திகதியும் நேரமும் குறிப்பிடும் அறிவித்தல்களான, பதவி-வெற்றிடங்கள் மற்றும் பரீட்சைகளுக்கு விண்ணப்பம் கோரும் அறிவித்தல்கள், கேள்விப்பத்திர அறிவித்தல்கள் அத்துடன் ஏல விற்பனைத் திகதியும் நேரமும் குறிப்பிடும் அறிவித்தல்கள் என்பன அவ்வவ் அறிவித்தல்களில் உள்ள விடயங்களில் அக்கறை செலுத்துவோர் ஆக்கபூர்வமாக பயனுறும் வகையில் அவை பிரசுரிக்கப்படுவதற்காக அரசாங்க அச்சகத்துக்கு அனுப்பிவைக்கப்படும் திகதியிலிருந்தும் அத்துடன் அவை பிரசுரமாகும் திகதியிலிருந்தும் போதிய கால அவகாசம் கொண்டதாக தயாரிக்கப்பட்டு அனுப்பிவைக்கப்பட வேண்டும் என சகல அரசாங்க திணைக்களங்கள், கூட்டுத்தாபனங்கள், சபைகள் ஆகியன அறிவுறுத்தப்படுகின்றன. அறிவித்தல்கள் தொடர்பிலூன பிழைதிருத்தங்கள் சம்பந்தமாக செய்யப்படும் முறைப்பாடுகள் மற்றும் விசாரணைகள் என்பன வர்த்தமானியில் குறிப்பிட்ட அறிவித்தல்கள் பிரசுரமாகிய திகதியிலிருந்து மூன்று மாதங்கள் கழிந்த பின்னர் ஏற்றுக்கொள்ளப்படமாட்டா என்பதனை கவனத்திற்கொள்ளவும்.

வர்த்தமானப் பத்திரிகையில் பிரசுரமாகும் சகல அறிவித்தல்களும், அவை பிரசுரமாகும் திகதிக்கு இரண்டு வாரங்களுக்கு முன்னர், அதாவது 2023, பெப்புருவரி மாதம் 24 ஆந் திகதி வெள்ளிக்கிழமை பிரசுரிக்கப்படவேண்டிய அறிவித்தல்கள் 2023, பெப்புருவரி மாதம் 10 ஆந் திகதி நண்பகல் 12.00 மணிக்கு அல்லது அதற்கு முன்னர் கிடைக்கக்கூடியவாறு தபால் மூலம் அல்லது நேரில் சேர்ப்பிக்கப்பட வேண்டும்.

**2006 ஆம் ஆண்டின் 19 ஆம் இலக்க, இலத்திரனியல் கொடுக்கல் வாங்கல் சட்டத்தின் 9 ஆம் பிரிவு**

*“ஏதேனும் பிரகடனம், விதி, ஒழுங்கு விதி, கட்டளை, துணை விதி, அறிவிப்பு அல்லது வேறு விடயம் வர்த்தமானியில் வெளியிடப்பட வேண்டுமென ஏதேனும் சட்டம் அல்லது சட்டவாக்கம் ஏற்பாடு செய்யுமிடத்து, அப்போது, அத்தகைய விதி, ஒழுங்குவிதி, கட்டளை, துணை விதி, அறிவிப்பு அல்லது வேறு விடயம் இலத்திரனியல் வடிவத்தில் வெளியிடப்படின், அத்தகைய தேவைப்பாடு திருப்திப்படுத்தப்பட்டுள்ளதாகக் கருதப்படுதல் வேண்டும்.”*

**கங்கானி லியனகே,**
*அரசாங்க அழுத்தகர்.*

அரசாங்க அச்சுத் திணைக்களம்,
கொழும்பு 8,
*2023 ஆம் ஆண்டு சனவரி மாதம் 02 ஆந் திகதி.*

*இவ்வர்த்தமானியை* www.documents.gov.lk *எனும் இணையத்தளத்திலிருந்து பதிவிறக்கம் செய்ய முடியும்.*


171-B 82424-5,413 (2023/02)

# இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் வர்த்தமானியில் விளம்பரப்படுத்தப்படும் அரசாங்க சேவை நியமனங்களுக்கு ஏற்புடைத்தாகும் பொது நிபந்தனைகள்

**1. வேண்டப்படும் பொதுத் தகைமைகள் :**

1.1 விண்ணப்பதாரர் ஒவ்வொருவரும் தாம் இலங்கையர் என்பதைத் திருப்திகரமான முறையில் நிரூபித்தல் வேண்டும். இலங்கையர் என்பவர் இலங்கைப் பிரசாவுரிமைச் செய்சட்டத்தினால் வரையறை செய்யப்பட்டபடி வம்சாவழியாகவோ பதிவுவழியாகவோ இலங்கைப் பிரசையாக இருப்பவராகும்.

1.2 சிரேட்ட பாடசாலைச் சான்றிதழ் பரீட்சையில் அல்லது அதற்குச் சமமான அல்லது அதைவிட உயர்ந்த பரீட்சையில் சித்தியடைந்திருத்தல் ஆகக்குறைந்த கல்வித் தகைமையாக விதிக்கப்பட்டுள்ள எந்தப் பதவிக்கும் விண்ணப்பிக்கும் வேட்பாளர் ஒருவர் சிரேட்ட பாடசாலைச் சான்றிதழ் பரீட்சையில் அல்லது அதற்குச் சமமான பரீட்சையில் அவர் சிங்களவராக இருந்து சிங்கள மொழி மூலத்தில் கல்வி கற்றவராகவிருக்குமிடத்து அல்லது தமிழராகவிருந்து தமிழ் மொழி மூலத்தில் கல்வி கற்றவராகவிருக்குமிடத்து, விடயத்துக்கேற்ப, சிங்கள மொழியில் அல்லது தமிழ் மொழியில் சித்திபெற்றிருத்தல் வேண்டும். இத்தேவைப்பாடு (1961, சனவரி 01 ஆந் தேதிக்கு முற்பட்டவொரு திகதி தொடக்கம் அரசாங்க சேவையில் இருப்பவர்களுக்கும் அரசாங்க சேவையில் பிற பதவிகளுக்கு நியமனங்களைப் பெற முயற்சி செய்பவர்களுமானவர்களுக்கும் ஏற்புடைத்தாகாது).

1.3 சிங்களத்தில் அல்லது தமிழில் கல்வி கற்காதவர்களும் விதித்துரைத்த அரச கரும மொழித் தேர்ச்சி சோதனைகளில் சித்தியடையத் தவறியமைக்காக தகுதிகூர் நிலைப்பரீட்சார்த்த நியமனங்கள் முடிவுறுத்தப்பட்டவர்களுமான "புதிய சேர்வாளர்கள்" ஆகிய அரசாங்க உத்தியோகத்தர்களினால் அனுப்பப்படும் விண்ணப்பங்கள், அவர்கள் அப்பதவிக்கு விதித்துரைக்கப்பட்ட அதியுயர் தேர்ச்சிச் சோதனையிலிருந்து விலக்களிப்பைப் பெறும் உரிமையை வழங்கக்கூடிய தகைமைகளைப் பெற்றிருந்தாலன்றி ஏற்றுக்கொள்ளப்பட மாட்டா.

**2. சேவை நிபந்தனைகள் : பொது**

2.1 நிதி ஒழுங்குவிதிகள், தாபனக்கோவை, திணைக்களக் கட்டளைகள் அல்லது ஒழுங்குவிதிகள் ஆகியவற்றுடன் அரசாங்கத்தினால் காலத்துக்குக்காலம் விதிக்கப்படும் வேறு எவையேனும் கட்டளைகள் அல்லது ஒழுங்கு விதிகளுக்கு அமைவாகவே சகல அரசாங்க சேவை உத்தியோகத்தர்களும் இருப்பர்.

2.2 அரச உத்தியோகத்தர் ஒருவர், அரசாங்க உத்தியோகத்தர் (பிணைக்) கட்டளைச் சட்டத்தின் நியதிகளின்படி பிணை செலுத்தும்படி வேண்டப்படலாம்.

அந்தப் பிணை சம்பந்தப்பட்ட அமைச்சின் செயலாளர் தீர்மானிக்கும் அத்தகைய தொகையாகவும் அத்தகைய விதத்திலும் செலுத்தப்படல் வேண்டும்.

2.3 அரச உத்தியோகத்தர் ஒருவர் தீவின் எந்தப் பகுதியிலூவது சேவையாற்றும்படி கேட்கப்படலூம்.

**3. நிரந்தர பதவிகளை வகிக்கும் அரச உத்தியோகத்தர்களுக்கு ஏற்புடையதாகும் சேவை நிபந்தனைகள் :**

3.1 நிரந்தர பதவிகளை வகிக்கும் அரச உத்தியோகத்தர்கள் மேலே 2 ஆம் பிரிவில் குறிப்பிடப்பட்ட நிபந்தனைகளுக்கு அமைவாக இருக்க வேண்டியதுடன் பின்வரும் நிபந்தனைகளுக்கும் அமைவாக இருத்தல் வேண்டும் :-

3.1.1 சகல நியமனங்களும் ஏதாவது ஒரு பதவி தொடர்பாக நீண்ட காலம் தேவையெனக் கருதப்பட்டாலொழிய மூன்று வருடத்துக்கு தகுதிகூர் நிலையிலேயே இருக்கும். தகுதிகூர் காலத்தின் ஏதாவது ஒரு நேரத்தில் காரணம் எதுவும் கொடுக்காமலே ஒரு நியமனத்தை நிறுத்திவைக்கலாம்.

3.1.2 சகல அரசாங்க உத்தியோகத்தர்களும் இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் IV ஆம் அத்தியாயத்தின் ஏற்பாடுகளுக்கும் அரசாங்கத்தின் மொழிக் கொள்கையைச் செயற்படுத்துவதற்கு காலத்துக்குக் காலம் ஆக்கப்படும் எந்தச் சட்டங்களுக்கும் அல்லது ஒழுங்குவிதிகளுக்கும் அல்லது விதிகளுக்கும் அமைந்து நடக்குமாறு வேண்டப்படுவர்.

3.1.3 சிங்கள மொழி மூலத்தில் அல்லது தமிழ் மொழி மூலத்தில் அரசாங்க சேவையில் சேராத சகல அரசாங்க உத்தியோகத்தர்களும் அரசகரும மொழிகளிலொன்றில் பணியாற்றும் அறிவைப் பெற்றுக்கொள்ளுமாறு வேண்டப்படுவர்.

3.1.4 அரசாங்க சேவையில் சிங்களம் அல்லது தமிழ் தவிர்ந்த ஒரு மொழி மூலத்தில் அரசாங்க சேவையில் சேர்ந்த உத்தியோகத்தரொருவர் தகுதிகூர் நிலைக்காலம் முடிவுற்றதன் பேரில் பதவியில் உறுதிப்படுத்தல் பிறவற்றுள், அவர் அரச கரும மொழிகளிலொன்றில் நியமனத் திகதியிலிருந்து ஒரு வருடத்துக்குள் I ஆம் தரத் தேர்ச்சிச் சோதனையிலும் இரண்டு வருடங்களுக்குள் II ஆம் தரத் தேர்ச்சிச் சோதனையிலும் (ஏற்புடையவிடத்து) மூன்று வருடங்களுக்குள் III ஆம் தரத் தேர்ச்சிச் சோதனையிலும் சித்தியடைவதில் தங்கியிருக்கும். ஒரு தேர்வுக்கென விதிக்கப்பட்ட காலத்தினுள் அதில் சித்தியுரத் தவறினால் வேதன ஏற்றம் இடைநிறுத்தப்படும். அந்த இடைநிறுத்தம் விதிக்கப்பட்ட காலத்துக்கு மேல்வரும் ஆறு மாதங்களுள் தேர்வில் சித்தியுறத் தவறினால் நிறுத்தமாக மாற்றப்படும். அத்தகைய ஏற்ற நிறுத்தம் தேர்வில் எய்தும் வரையில் அல்லது 3.1.6 ஆம் பிரிவின் ஏற்பாடுகள் ஏற்புடைத்தாகும். அத்தகைய காலம் வரையில் செயலில் இருக்கும்.

3.1.5 அத்தகைய உத்தியோகத்தர்களுக்கு நியமனம் வழங்கப்பட்டதன் பேரில் அரசகரும மொழிகளிலொன்றில் தேர்ச்சி பெறுவதற்கு 6 மாத காலத்திற்கு முழுச் சம்பளத்துடனான வசதிகள் வழங்கப்படல் வேண்டும். அதன் பின்னர் அவர் தொடர்புடைய தேர்ச்சிப் பரீட்சையில் சித்தியடையுமாறு வேண்டப்படுவர். அவர் சித்தியடையத் தவறுமிடத்து முழுச் சம்பளத்துடனான 6 மாத காலத்திற்கு உடனடியாகப் பின்னர், அவர் தமது வழக்கமான கடமைகளை நிறைவேற்றும் வேளையில், 2 வருட காலத்திற்குள் பரீட்சையில் சித்தியடைவதற்கு அவருக்குச் சந்தர்ப்பம் வழங்கப்படும்.

3.1.6 இந்த விதித்துரைத்த 2 1/2 வருட காலத்திற்குள் பரீட்சையில் அவர் சித்தி அடையத் தவறினால் அவருடைய சேவை முடிவுறுத்தப்படும்.

3.1.7 அரசாங்க சேவையின் நிரந்தரமான பதவியொன்றில் ஏற்கனவே பதவி உறுதிசெய்யப்பட்ட அரச உத்தியோகத்தர் ஒருவர் அரசாங்க சேவையில் உள்ள வேறொரு நிரந்தர பதவியொன்றில் நியமிக்கப்படுமிடத்து அவர் இயல்பாகவே தகுதிகூர் நிலையில் இருக்க வேண்டியதில்லை.

3.1.8 தெரிவுசெய்யப்பட்ட வேட்பாளர் (அரசாங்க சேவையில் ஏற்கனவே நிரந்தர/தற்காலிக பதவிகளை வகிப்பதுடன் ஏற்கனவே வைத்திய பரீட்சைக்கு உள்ளானவர்கள் தவிர்ந்த) தீவின் எந்தப் பகுதியிலாவது சேவை செய்வதற்கு உடற்றகுதி உள்ளவர்கள் என்பதனைச் சோதனை செய்து அவர்கள் அரசாங்க மருத்துவ உத்தியோகத்தர் ஒருவரின் மருத்துவப் பரிசோதனைக்கு உட்படல் வேண்டும்.

**4. பணிக்கமர்த்தும் நியதிகள் :**

4.1 நிரந்தரமானதும் ஓய்வூதியத்திற்குரித்துடையதுமான பதவிகளுக்கு நியமிக்கப்படும் அரச உத்தியோகத்தர் அவர்களின் வேதனத்திலிருந்து அறவிடப்பட வேண்டுமென அரசாங்கத்தால் விதிக்கப்பட்டுள்ள நூற்று வீதத்துக்குச் சமமானவொரு தொகையைத் தங்களின் வேதனங்களிலிருந்து விதவைகள், அநாதைகள் ஓய்வூதியத் திட்டத்திற்கு உதவுதொகையாக வழங்குதல் வேண்டும்.

4.2 நிரந்தர அல்லது தற்காலிகப் பதவிகளுக்கு ஏற்பாட்டு நிதிய அடிப்படையில் நியமிக்கப்படும் அரச உத்தியோகத்தர்கள் தங்களின் திரட்டிய வேதனங்களின் 6% ஐ அரசாங்க சேவை ஏற்பாடு நிதியத்துக்கு உதவு தொகையாக வழங்குமாறு வேண்டப்படுவர். நிதி ஆண்டின் இறுதியில் கட்டாய உதவுதொகையாகக் குறித்த நிதியத்திற்கு வரவு வைக்கப்பட்டுள்ள தொகையின் 150% க்குச் சமமானவொரு தொகையைக் குறித்த நிதியத்துக்குத் தனது உதவுதொகையாக அரசாங்கம் செலுத்தும்.

4.3 அரசாங்க சேவையில் ஓய்வூதியத்திற்குரித்துடைய நியமனங்கள் வகிப்பவர்களும், உள்ளூராட்சிச் சேவையிலுள்ள ஓய்வூதியத்திற்குரித்துடைய பதவிகளுக்கும் நியமிக்கப்படுவதற்காக விடுவிக்கப்படுபவர்களுக்குமான உத்தியோகத்தர்களுக்கு உள்ளூராட்சிச் சேவையில் ஓய்வூதியத்திற்குரித்துடைய பதவிகளுக்கு நியமிக்கப்படுவதற்காக விடுவிக்கப்படுபவர்களுமான உத்தியோகத்தர்களுக்கு முறையே உள்ளூராட்சிச் சேவையிலும் அரசாங்க சேவையிலுமுள்ள அவர்களது பதவிகளில் ஓய்வூதியத்திற்குரித்துடைய நிலையளிக்கப்படும்.

4.4 ஓய்வூதியப் பிரமாணக் குறிப்புகளின்கீழ் ஓய்வூதியத்திற்குரித்துடையவையான, அரசாங்க சேவையிலுள்ள பதவிகளுக்கு நியமிக்கப்படுவதற்காக விடுவிக்கப்படும் தரைப்படை, கடற்படை, வான்படை ஆகியவற்றின் நிலையப்படை ஆளணியினர்க்கு அரசாங்க சேவையிலுள்ள அவர்களது பதவிகளில் ஓய்வூதியத்திற்குரித்துடைய நிலையளிக்கப்படும். இப்பிரமாணக் குறிப்புகளின்கீழ் ஓய்வூதியத்திற்குரித்துடையதெனப் பிரகடனப்படுத்தப்பட்டுள்ள ஓர் அரச உத்தியோகத்தர் ஆக அளிக்கப்படுமொரு பதவியொன்றில் நியமனத்தை ஏற்பதாக விடுவிக்கப்படும், படைத்தாங்கு சேவைகளின் உறுப்பினரொருவரினது இழக்கப்படாத முழுச் சம்பள சேவைக்காலமானது இப்பிரமாணக் குறிப்புக்களிலுள்ளவற்றிற்கு மாறாக யாதேனும் இருந்தபோதிலும் இப்பிரமாணக் குறிப்புகளின்கீழ் கொடுக்கப்படற்பாலதான ஏதேனும் ஓய்வூதியத்தின் அல்லது பணிக்கொடையின் பொருட்டுக் கணக்கில் எடுத்துக்கொள்ளப்படும்.

**5. யுத்த சேவைச் சலுகை :**

5.1 ஏனைய சகல விடயங்களிலும் தகைமை கொண்டிருப்பின் ஐக்கிய இராச்சியத்தின் போர்ப்படைகளில் சேவையாற்றியவர்களுக்கும், தீயணைக்கும் படை, விமானத் தாக்கப்பாதுகாப்புப் படை, ஊர்ப்பாதுகாப்பு படை என்பனவற்றிலும் முழுநேரக் கடமையாற்றியவர்கள் அவர்கள் தாமாகவே இப்படைகளை விட்டு விலகியிருக்காவிடின், 1939 ஆம் ஆண்டு செத்தெம்பர் மாதம் 03 ஆந் திகதியிலிருந்து 1949 ஆம் ஆண்டு திசெம்பர் மாதம் 31 ஆந் திகதிவரையில் உள்ள அச்சேவைக்காலத்தை தகைமை நோக்கத்தின் பொருட்டு மாத்திரம் தங்கள் வயதிலிருந்து கழிக்க அனுமதிக்கப்படுவர். ஆயின், அவர்கள் குறித்த படைகளில் 1945 ஆம் ஆண்டு ஓகத்து மாதம் 15 ஆந் திகதிக்கு முன்பு சேர்ந்திருத்தல் வேண்டும். அத்துடன் அவர்கள் பற்றிய சேவை திருப்திகரமானதாகவும் தொடர்ச்சியானதாகவும் இருத்தல் வேண்டும்.

**6. அரசசேவையில் சேவையாற்றும் உத்தியோகத்தர்கள் :**

6.1 எல்லாத் தகைமைகளையும் உடைய அரசாங்க சேவை உத்தியோகத்தர்களின் விண்ணப்பங்கள் தொடர்புள்ள திணைக்களத் தலைவர்களினூடாக அனுப்பப்படல் வேண்டும். அரசாங்க சேவையில் நிரந்தரமான பதவிகளை வகிக்கும் அரச உத்தியோகத்தரின் விண்ணப்பங்களைப் பொறுத்தமட்டில் விண்ணப்பதாரர் தெரிவுசெய்யப்பட்டால் அவர்கள் புதிய பதவியை ஏற்றுக்கொள்வதற்கு அவரை விடுவிக்க முடியுமா அல்லவா என்பதைத் திணைக்களத் தலைவர்கள் தாம் விண்ணப்பங்களை அனுப்பும்போது குறிப்பிடுதல் வேண்டும்.

6.2 விண்ணப்பதாரி குறிப்பிட்ட ஒரு நேரத்திலும் இடத்திலும் நேர்முகப் பரீட்சைக்குச் சமுகம் கொடுக்கும்படி வேண்டப்படலூம். அது தொடர்பாகப் பிரயாணச் செலவோ வேறு செலவுகளோ கொடுக்கப்பட மாட்டாது.

6.3 விண்ணப்பதாரியைச் சிபாரிசு செய்ய விரும்பும் எவராயினும் ஒருவர் சான்றிதழ் ஒன்றின் மூலம் அப்படிச் செய்யலாம். விண்ணப்பதாரி ஒருவரைத் தெரிவு செய்வதற்கு எந்தவொரு விதத்திலாவது ஆதரவு தேடினால் அல்லது செல்வாக்கைப் பிரயோகிக்க எத்தனித்தால் அது அத்தகைய விண்ணப்பதாரியைத் தகைமையற்றவர் ஆக்கிவிடும்.

6.4 விண்ணப்பத்தில் கொடுக்கப்பட்டுள்ள கூற்று ஏதாவது பிழையானதாக இருந்து அப்பிழை விண்ணப்பதாரர் தெரிவு செய்யப்படுவதற்கு முன்பதாகக் கண்டுபிடிக்கப்பட்டால் அது அவரைத் தகுதியற்றவராக்குவதற்கு உட்படுத்தும். அவர் தெரிவுசெய்யப்பட்ட பின்பு அப்பிழை கண்டுபிடிக்கப்படின் அது அவர் வேலையிலிருந்து நீக்கப்படுவதற்கு உட்படுத்தும்.

6.5 விளம்பரத் தேவைகளுக்கு அமையபடாத விண்ணப்பங்கள் நிராகரிக்கப்படும்.

**7. தகைமையின் நோக்கத்துக்காக வேதனத்தின் பொருள் வரையறை :**

7.1 தகைமையின் நோக்கில் வேதனம் திரட்டிய வேதனம் மட்டும் எனப் பொருள்படும். அதில் பதில் வேதனம். படி முதலியன சேர்ந்திருக்கா.

**8. ஆட்சேர்த்தல், பதவி உயர்வு வழங்குதல் தொடர்பான புதிய தேசிய கொள்கை :**

இனிமேல் வெளியிடப்படவிருக்கும் அரசாங்க நிருவாக சுற்றறிக்கைகளின் மூலம் திருத்தங்கள் மேற்கொள்வதற்கு உட்பட்டு 1990.03.09 ஆந் திகதிய இல. 15/90, 1990.03.25 ஆந் திகதிய இல. 15/90 (i), 1990.06.15 ஆந் திகதிய 15/90 (ii) கொண்ட அரசாங்க நிருவாகச் சுற்றறிக்கைகளில் காட்டப்பட்டுள்ள கொள்கைகளுக்கு இணங்க அரசாங்க சேவைக்கு, மாகாண அரசாங்க சேவைக்கு, அரசாங்க கூட்டுத்தாபனங்களுக்கான ஆட்சேர்ப்புக்கள், பதவி உயர்வுகள் என்பன 1990.01.01 ஆந் திகதி தொடக்கம் நடைமுறைப்படுத்தப்படவுள்ளது.

# பரீட்சார்த்திகளுக்கான விதிகளும் அறிவுறுத்தல்களும்

1976 ஆம் ஆண்டின் 19 ஆம் இலக்க திருத்தச் சட்டத்துக்கமைவான, 1968 ஆம் ஆண்டின் 25 ஆம் இலக்க பொதுப் பரீட்சைகள் சட்டத்தின் ஏற்பாடுகளுக்கும் காலத்துக்குக்காலம் வெளியிடப்படுகின்ற சட்டங்களுக்கும் ஒழுங்குமுறைகளுக்கும் ஏற்ப ஒழுகுவதற்கு சகல பரீட்சார்த்திகளும் கட்டுப்பட்டவர்களாவர்.

1976 ஆம் ஆண்டின் 19 ஆம் இலக்கத் திருத்தச் சட்டத்துக்கமைவான, 1968 ஆம் ஆண்டின் 25 ஆம் இலக்க பொதுப் பரீட்சைகள் சட்டத்தின் 20 ஆம் வாசகத்தின் மூலம் பரீட்சைகள் ஆணையாளர் நாயகத்துக்கு வழங்கப்பட்டுள்ள அதிகாரங்களுக்கமைய கீழ்க் குறிப்பிடப்படும் நிபந்தனைகள் மற்றும் கட்டுப்பாடுகள் விதிக்கப்படுகின்றன.

அனைத்துப் பரீட்சார்த்திகளும், கீழ்க் குறிப்பிடப்படும் விதிகளுக்கு கட்டுப்பட வேண்டும் என்பதுடன் இவ் விதிகளில் எவற்றையேனும் மீறும் பரீட்சார்த்தி ஒருவர் பரீட்சைகள் ஆணையாளர் நாயகத்தின் தீர்மானத்துக்கு அமைய கீழ்க் குறிப்பிடப்படும் தண்டனைகளில் ஒன்று அல்லது ஒன்றுக்கு மேற்பட்ட தண்டனைகளுக்கு உட்படுத்தப்படுவார்.

I. விசாரணைக்கு உட்படுத்தப்படுகின்ற முழுப் பரீட்சைக்கும் அல்லது அதன் ஒரு பகுதிக்கு தோற்றுவதற்குத் தடை விதித்தல்;

II. விசாரணைக்கு உட்படுத்தப்படும் பரீட்சையின் ஒரு பாடத்திற்கு அல்லது மொத்தப் பரீட்சைக்கும் தகுதியற்றவர் ஆக்குதல்;

III. இலங்கைப் பரீட்சைத் திணைக்களத்தின் நடாத்தப்படுகின்ற அனைத்துப் பரீட்சைகளுக்கும் தோற்றுவதற்கு வாழ்நாள் தடை விதித்தல்;

IV. குறிப்பிட்ட காலப் பகுதிக்கு இலங்கைப் பரீட்சைத் திணைக்களத்தினால் நடாத்தப்படுகின்ற பரீட்சைகளில் தோற்றுவதற்குத் தடை விதித்தல்;

V. இடைநிறுத்தப்பட்ட, பரீட்சைக்கான தடை உடன் கடிதம் ஒன்றை வழங்குதல்;

VI. குறிப்பிட்ட காலப் பகுதிக்கு சான்றிதழ் தடை செய்யப்படல்;

VII. பொதுப் பரீட்சைகள் சட்டத்தின் கீழ் குற்றவியல் வழக்கு ஒன்றைத் தாக்கல் செய்வதற்காக பரீட்சார்த்தியை காவற்றுறையிடம் ஒப்படைத்தல் அல்லது அக்குறித்த செயற்பாடு தொடர்பாக காவற்றுறையில் புகார் செய்தல்;

VIII. பரீட்சார்த்தி அரசாங்க ஊழியராக அமையும் சந்தர்ப்பத்தில் குறித்த பரீட்சார்த்தியின் செயற்பாடு தொடர்பாக (ஒழுக்காற்று நடவடிக்கைகளை மேற்கொள்வதற்காக) குறித்த பரீட்சார்த்தியின் நியமன அதிகாரிக்கு அறிவித்தல்.

பரீட்சைக்கு முன்பு, பரீட்சை நடைபெற்றுக் கொண்டிருக்கும் போது அல்லது பரீட்சைக்கு பின்பு அல்லது வேறு எந்த ஒரு சந்தர்ப்பத்திலும் அவ்வாறான பரீட்சார்த்தி தொடர்பாக நடவடிக்கை எடுக்கும் அதிகாரத்தை பரீட்சைகள் ஆணையாளர் நாயகம், தம்வசம் கொண்டவர் ஆவார். இது தொடர்பாக அவரால் மேற்கொள்ளப்படும் தீர்மானம் இறுதியானதாகும்.

1. சகல பரீட்சார்த்திகளும் பரீட்சை மண்டபத்தினுள் மற்றும் பரீட்சை நடைபெறும் வளாகத்தினுள் பரீட்சை மேற்பார்வையாளருக்கு அவரது பணிக் குழாமுக்கு, அதே போன்று ஏனைய பரீட்சார்த்திகளுக்கு இடையூறு அல்லது தடங்கல்கள் ஏற்படாத வகையில் நடந்துகொள்ள வேண்டும். பரீட்சார்த்திகள் பரீட்சை வளாகத்தின் சொத்துகளுக்கு அல்லது பரீட்சை ஊழியர்களின் தனிப்பட்ட சொத்துகளுக்கு சேதம் ஏற்படுத்துதல் கூடாது.

2. பரீட்சார்த்திகள் பரீட்சை நடைபெற்றுக் கொண்டிருக்கும் காலப் பகுதியிலும் பரீட்சை ஆரம்பிப்பதற்கு முன்பும் அதே போன்று பரீட்சை நடைபெற்று முடிவடைந்தவுடனும் பரீட்சை மேற்பார்வையாளர் மற்றும் அவரது பணிக் குழுவின் அறிவுறுத்தல்களுக்கு ஏற்ப நடந்து கொள்ளல் வேண்டும்.

3. பரீட்சையின் போது வினாப்பத்திரத்திற்கு விடையளிப்பது ஆரம்பிக்கப்பட்டு அரை மணித்தியாலம் கழிந்த பின்னர் எந்தவொரு பரீட்சார்த்தியும் பரீட்சை மண்டபத்திற்குள் அனுமதிக்கப்பட மாட்டார்கள். மேலும் பரீட்சை முடிவடையும் வரை எந்தவொரு பரீட்சார்த்தியும் பரீட்சை மண்டபத்திலிருந்து வெளியே செல்வதற்கும் இடமளிக்கப்பட மாட்டாது. செயன்முறைப் பரீட்சைகள் அல்லது வாய்மொழி மூலமான பரீட்சைகளுக்கு உரிய நேரத்திற்கு சமுகம் அளிப்பதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும்.

4. சகல பரீட்சார்த்திகளும் தமது சுட்டெண்ணுக்குரிய ஆசனம் தவிர்ந்த வேறு எந்த இடத்திலும் அமர்தல் கூடாது. பரீட்சை மேற்பார்வையாளரின் விசேட அனுமதி இன்றி தன்னுடைய இடத்தை மாற்றக் கூடாது. தனக்கு ஒதுக்கப்பட்ட ஆசனத்தைத் தவிர வேறு இடத்தில் அமர்தல் மோசடி நோக்கத்துடன் செய்யப்பட்ட செயலாகக் கருதப்பட நேரிடும்.

5. பரீட்சை மண்டபத்தில் பூரண அமைதி பேணப்பட வேண்டும். எக் காரணம் கொண்டும் பரீட்சை மண்டபத்தினுள் பரீட்சை மேற்பார்வை பணிக்குழுவில் உள்ள ஒருவரைத் தவிர பரீட்சை மண்டபத்தினுள் அல்லது வெளியே இருக்கும் எவர் ஒருவருடனும் எந்தவித காரணத்திற்காகவும் கதைத்தல் அல்லது தகவல் பரிமாறல் அல்லது வேறு எந்தவிதமான கொடுக்கல் வாங்கலிலும் ஈடுபடுதல் முற்றாகத் தடை செய்யப்பட்டுள்ளது.

6. பரீட்சை சுட்டெண்ணை மட்டும் கொண்டே பரீட்சார்த்தியின் விடைத்தாள்கள் இனங்காணப்படுகின்றமையால் விடைத்தாளில் தன்னுடைய பெயரை எழுதுதல், விடைத்தாளை இனங்கண்டு கொள்ளக்கூடிய வகையில் ஏதேனும் குறியீடு அல்லது குறிப்பு இடுதல், விடைத்தாளில் அநாகரிகமான அல்லது அவசியமற்ற விடயங்களை எழுதுதல், விடைத்தாளுடன் நாணயத்தாள்களை இணைத்தல் ஆகியவை முற்றாகத் தடை செய்யப்பட்டுள்ளன. மேலும் வேறு எவரேனும் பரீட்சார்த்தியின் சுட்டெண்ணை தன்னுடைய விடைத்தாளில் எழுதுதலும் மோசடி நடவடிக்கை ஒன்றைச் செய்வதற்கு முயன்றதாகக் கருதப்படும். இனங்கண்டு கொள்ள முடியாத வகையில் சுட்டெண் எழுதப்பட்ட விடைத்தாள்களும் நிராகரிக்கப்படும்;

7. உமக்கு பரீட்சை மண்டபத்தினுள் வழங்கப்படும் தாள்கள் (பரீட்சை நடைபெறும் திகதிக்குரிய நோக்குனரின் குறுகிய கையொப்பம் மற்றும் திகதி இடப்பட்ட விடை எழுதும் தாள்கள்) தவிர வினாத்தாளிலோ அல்லது மேசையிலோ அல்லது வேறு ஏதேனும் இடத்திலோ எவற்றையும் எழுதுதல் கூடாது. இந்த அறிவுறுத்தல்களுக்கு மாறாக செயற்படுதல் மோசடி நோக்கத்துடன் செய்யப்பட்ட செயலாகக் கருதப்படும்.

8. பரீட்சார்த்திக்கு வழங்கப்படுகின்ற தாள்களை அல்லது விடை எழுதும் புத்தகத்தை கிழித்தல் அல்லது கசக்குதல் கூடாது. பரும்படி வேலைகளை செய்து பார்ப்பதற்காக உபயோகிக்கும் சகல தாள்களையும் தெளிவாக குறுக்காக கோடிட்டு விடைத்தாளுடன் இணைத்தல் அல்லது விடைத்தாளுடன் கையளித்தல் அல்லது வழங்கப்படுகின்ற அறிவுறுத்தலின் படி செய்தல் வேண்டும். பரீட்சை மண்டபத்தில் எழுதப்பட்ட எதனையும் வெளியே கொண்டு செல்லுதல் தடை செய்யப்பட்டுள்ளது. ஒரே வினாவிற்கான விடை இரு இடங்களில் எழுதப்பட்டிருப்பின் அவசியமற்ற விடையைத் தெளிவாக வெட்டி விட வேண்டும்.

9. பரீட்சையின் போது விடையளிப்பதற்காக உமக்கு வழங்கப்படுகின்ற தாள்கள் மற்றும் வேறு பொருட்களை பரீட்சை மண்டபத்திற்கு வெளியே கொண்டு செல்லுதல் தடை செய்யப்பட்டுள்ளது. இவ்வாறான அனைத்துப் பொருட்களும் பரீட்சைகள் ஆணையாளர் நாயகத்திற்கு சொந்தமானதுடன் இவ் விதியினை மீறுதல் ஒரு தண்டனைக்குரிய செயற்பாடாகக் கருதப்படும்.

10. பரீட்சையின் போது விடையளிப்பதற்காக தனக்கு வழங்கப்படுகின்ற காகிதாதிகள் ஒவ்வொரு பரீட்சையின் போதும் தனக்ருகே வைத்துக் கொள்ளக்கூடிய எழுத்து மூலமான அனுமதியுள்ள பொருட்கள் தவிர்ந்த ஏனைய குறிப்புப் புத்தகங்கள், குறிப்புகள் உள்ளடங்கிய தாள்கள் அல்லது கடதாசித்துண்டுகள் போன்றவை பரீட்சை மண்டபத்தினுள் பரீட்சைக்குத் தோற்றும் சந்தர்ப்பத்தில் தன் வசம் அல்லது அருகே வைத்திருத்தல் கூடாது. அது போன்றே பரீட்சை மண்டபத்தினுள் கையடக்கத் தொலைபேசி, இலத்திரனியல் தொடர்பு சாதனங்கள்/கருவிகள் (Electronic Communication Instruments/ Devices) தன் வசம் அல்லது அருகே வைத்திருத்தல் மற்றும் அந்த சாதனங்கள்/கருவிகளை உபயோகித்து வெளி நபர்களின் உதவிகளைப் பெற்றுக் கொள்ளல் மற்றும் பரீட்சை நடைபெறும் போது வேறு நபர்களுக்கு மற்றும் சமூக ஊடகங்களுக்கு தகவல் அனுப்புதல் மோசடிச் செயற்பாடு என்பதுடன் தண்டனைக்குரிய குற்றமாகும்.

11. இலத்திரனியல் தொடர்பு சாதனங்கள்/கருவிகள் மேற்குறிப்பிட்ட 10ஆவது பந்தியில் விபரிக்கப்பட்டுள்ள செயற்பாடுகள் தொடர்பாக உபயோகிக்கப்பட்டது கண்டுபிடிக்கப்பட்டால் அச் சாதனங்கள்/கருவிகள் உரிய விசாரணை நடவடிக்கைகள் முடிவடையும் வரை பரீட்சைகள் ஆணையாளர் நாயகத்தின் வசம் எடுக்கப்படுவதற்கான நடவடிக்கை மேற்கொள்ளப்படும்.

12. பரீட்சை மண்டபத்தில் அமர்ந்த பின்னர், பரீட்சைக்கு முன் அல்லது பரீட்சை நடைபெறும் சந்தர்ப்பத்தில் எந்தவொரு பரீட்சார்த்தியும் தன் அருகே பரீட்சைக்காக கொண்டு வருவதற்கு அனுமதிக்கப்படாத எந்தவொரு பொருளையும் அல்லது உபகரணத்தையும் வைத்திருத்தல் முற்றாகத் தடை செய்யப்பட்டுள்ளது. பரீட்சை மேற்பார்வையாளர் மற்றும் அவரது பணிக் குழாம் கட்டளையிட்டால் சகல பரீட்சார்த்திகளும் தன் வசம் உள்ளவற்றை வெளிப்படுத்துவதற்கும் மற்றும் பரிசோதிப்பதற்கும் கட்டுப்படுவதுடன் இவ்வாறான தேவைப்பாட்டினை மீறுவது மோசடியான செயற்பாட்டை செய்வதற்கு முயற்சித்ததாகக் கருதப்படும்.

13. எவரேனும் ஒரு பரீட்சார்த்தி வேறு ஒரு பரீட்சார்த்தியின் விடைத்தாளிலிருந்து அல்லது புத்தகத்திலிருந்து அல்லது தாளிலிருந்து அல்லது குறிப்பெழுதிய தாள்களிலிருந்து அல்லது சமிக்ஞைகள் மூலம் அல்லது வேறு ஏதேனும் ஒன்றிலிருந்து பார்த்து எழுதுதல் அல்லது பார்த்து எழுத முயற்சித்தல் அல்லது மோசடியாக நடந்து கொள்ளல் என்பன குற்றமாகும். வேறு பரீட்சார்த்திக்கு உதவி செய்தல், வேறு பரீட்சார்த்தியிடமிருந்து அல்லது நபரிடமிருந்து அல்லது பரீட்சை பணிக் குழுவினரிடமிருந்து உதவி பெறுதல் குற்றம் என்பதுடன் விடையளித்து முடிந்த சகல தாள்களையும் எழுதிக் கொண்டிருக்கும் தாளுக்குக் கீழே வைத்து விடையளித்தல் வேண்டும். எழுதுகின்ற தாள்களை மேசையின் மேல் பரப்பி வைத்திருத்தல் கூடாது.

14. பரீட்சை ஆரம்பிக்கப்பட்டு வினாத்தாளுக்கு விடையளிக்கும் போது எக்காரணம் கொண்டும் குறுகிய நேரத்திற்குக் கூட பரீட்சை மண்டபத்திலிருந்து வெளியே செல்வதற்கு எந்தவொரு பரீட்சார்த்திக்கும் இடமளிக்கப்பட மாட்டாது. எனினும், ஒரு பரீட்சார்த்திக்கு மலசலகூடத்திற்கு செல்வதற்காக பரீட்சை மண்டபத்திலிருந்து வெளியே செல்ல வேண்டிய அவசியம் ஏற்பட்டால் பரீட்சை மேற்பார்வையாளரின் உதவி பணிக் குழுவின் உத்தியோகத்தர் ஒருவரின் கண்காணிப்பின் கீழ் பரீட்சார்த்திக்கு சிறிது நேரம் வெளியே செல்வதற்கு அனுமதிக்கப்படுவார். அவ்வாறு வெளியே செல்லும் முன்பும், மீண்டும் பரீட்சை மண்டபத்திற்குள் வரும் போதும் அவர் சோதனைக்கு உட்படுத்தப்படல் வேண்டும்.

15. பரீட்சை மண்டபத்தில் விடையளிக்கத் தொடங்குவதற்கு முன் அல்லது பின் உரிய பரீட்சார்த்திக்குப் பதிலாக போலிப் பரீட்சார்த்தி ஒருவர் தோற்றுதல் தண்டனைக்கு உள்ளாகக்கூடிய செயற்பாடாகும். ஆளடையாள அட்டையை மாற்றுதல் அல்லது போலி அடையாள அட்டையைச் சமர்ப்பித்தல் ஒரு மோசடிச் செயற்பாடாகக் கருதப்படும்.

16. பரீட்சார்த்தி ஒருவர் அல்லது பரீட்சார்த்தி அல்லாத ஒருவர் எந்தவொரு பரீட்சார்த்திக்கும் தவறான முறையில், மோசடி செய்யும் வகையில் உதவி செய்தல் ஒரு பாரிய குற்றமாக கருதப்படும்.

17. பரீட்சார்த்தி ஒருவர் கீழ்க் குறிப்பிடப்படும் அறிவுறுத்தல்களுக்கமைய செயற்படல் வேண்டும்:

(i) சகல பரீட்சார்த்திகளும் தனது அனுமதிப்பத்திரத்தில் கையொப்பத்தினை உறுதி செய்து கொள்வதும், விண்ணப்பிக்கப்பட்ட பாடங்கள் மற்றும் அனுமதிப்பத்திரத்தில் குறிப்பிட்டுள்ள பாடங்களுக்கிடையில் பொருந்தாத தன்மை காணப்படின் பரீட்சைத் திணைக்களத்தில் விசாரித்து பரீட்சைக்கு முன் அதைத் திருத்திக் கொள்வதும் மேற்கொள்ளப்பட வேண்டும்;

(ii) பரீட்சை ஆரம்பிப்பதற்கு அரை (1/2) மணித்தியாலத்திற்கு முன்னர் பரீட்சை மண்டபத்திற்கு சமுகமளித்தல் உசிதமானது என்பதுடன், பரீட்சை மண்டபம் நிச்சயமாகத் தெரியாதவிடத்து பரீட்சை ஆரம்பிக்கும் தினத்திற்கு முன்னரே அது குறித்து விசாரித்து பரீட்சை மண்டபத்தை சரியாக இனங்காணல் சிறந்தது;

(iii) பரீட்சைக்குத் தோற்றும் பரீட்சார்த்தி ஒவ்வொரு பாடங்களுக்குத் தோற்றும் போதும் தனது ஆள் அடையாள அட்டையை வழங்கி தனது ஆள் அடையாளத்தை உறுதிப்படுத்திக் கொள்ளுதல் வேண்டும்.

(a) ஆள் அடையாளத்தை உறுதிப்படுத்திக் கொள்வதற்குத் தேவையான ஆவணங்களை பரீட்சை மண்டபத்தில் சமர்ப்பிக்காவிடின், பரீட்சார்த்தியாய் இருத்தல் இரத்துச் செய்யப்பட நடவடிக்கை மேற்கொள்ளப்படுவதுடன், ஏதேனும் காரணத்தால் அதற்குத் தேவையான ஆவணங்களை பரீட்சை மண்டபத்திற்கு கொண்டு வர மறந்திருப்பின் அதனைப் பற்றி பரீட்சை மேற்பார்வையாளருக்கு அறிவித்து பரீட்சை முடிவடைவதற்கு முன்னர் அவற்றைச் சமர்ப்பிப்பதற்குரிய நடவடிக்கை மேற்கொள்ளப்பட வேண்டும்.

(b) சகல பரீட்சார்த்திகளும் தனது ஆள் அடையாளம் தெளிவாக வெளிப்படுத்தும் வகையில், முழு முகத்தையும் நன்றாக அடையாளம் காணக்கூடிய வகையில் பரீட்சை நடைபெறும் கால எல்லையில் பரீட்சை மண்டபத்தில் இருக்க வேண்டும்.

(iv) பரீட்சார்த்தி புளூடூத் (Bluetooth) போன்ற இலத்திரனியல் தொடர்பு சாதனங்கள்/கருவிகளை (Electronic Communication Devices) உபயோகிக்கவில்லை என்பதனை உறுதி செய்து கொள்வதற்காக பரீட்சை மண்டபத்தில் தனது இரு காதுகளையும் தெளிவாகத் தெரியும் வகையில் வைத்திருத்தல் வேண்டும்;

(v) பரீட்சை மண்டபத்தில் உமக்கு வழங்கப்படுகின்ற தாள்களை விடுத்து வேறு எவ்வித கடதாசிகளையும் விடையளிப்பதற்கு உபயோகிக்கக் கூடாது. எஞ்சிய கடதாசிகளை மற்றும் வேறு பொருட்களை அசுத்தப்படுத்தாது மீண்டும் உபயோகிக்கக்கூடிய வகையில் உமது மேசையின் மேல் வைக்க வேண்டும்;

(vi) பரீட்சார்த்திகள் தங்களது பேனா, பென்சில், அழிறப்பர், அடிமட்டம், கேத்திரகணித உபகரணங்கள், வர்ணப் பென்சில் பெட்டி, வர்ண சோக் பெட்டி போன்றவற்றைக் கொண்டு வருதல் வேண்டும்;

(vii) நீங்கள் உபயோகிக்கும் விடையளிக்கும் புத்தகம் மற்றும் சகல தாள்களிலும் விடையெழுத தொடங்கும் போது உடனடியாக சுட்டெண்ணைத் தெளிவாகக் குறிப்பிட வேண்டும். விடைத்தாள்களின் இருபுறமும் தெளிவாக, சுத்தமாக விடையெழுத வேண்டும். வினாவொன்றின் ஒரு பகுதிக்கு விடையெழுதிய பின் அவ் வினாவின் மற்றைய பகுதியை ஆரம்பிப்பதற்கு முன் ஒரு வரியையாவது வெறுமையாக விடுதல் வேண்டும். ஒவ்வொரு வினாக்களுக்குமான விடையினைப் புதிய பக்கத்தில் ஆரம்பித்தல் வேண்டும்;

(viii) விடையளிக்கும் தாளின் இடதுபுற விளிம்புக்கோடு காணப்படுவது வினாக்களின் இலக்கங்களை எழுதுவதற்காகும். வலதுபுற விளிம்புக்கோடு ஒதுக்கப்பட்டிருப்பது மதிப்பிடுபவரின் உபயோகத்திற்காகும். அதனால் அவற்றில் எதுவும் எழுதுதலாகாது. உம்மால் விடையளிக்கப்பட்ட வினாக்களின் இலக்கங்களைப் பிழையாக இடுவது குழப்பத்திற்குக் காரணமாக அமையும் என்பதனால் வினா இலக்கத்தைச் சரியாக எழுதுவதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும்;

(ix) கணித வினாக்களுக்கு விடையளிக்கும் போது கணக்குச் செய்முறைகள் பார்த்த மற்றும் பரும்படி வேலைகள் அந்தந்த ஒழுங்கில் கணக்கிற்கான விடையைக் கண்டு பிடித்ததன் ஒரு பகுதியாகக் காட்டப்பட வேண்டும். அவசியமான இடங்களில் வரையப்படும் வரிப்படங்கள் மற்றும் படங்கள் சரியானவையாகவும் குறிப்பிடத்தக்க அளவு பெரிதானதாகவும் இருத்தல் வேண்டும்;

(x) கட்டாயமான வினா மற்றும் தெரிவு செய்யப்பட வேண்டிய ஏனைய வினாக்கள் தொடர்பாக வினாப்பத்திரத்தில் ஆரம்பத்தில் குறிப்பிடப்பட்டுள்ள அறிவுறுத்தல்களைக் கவனமாக வாசித்தல் வேண்டும். வினாப்பத்திரத்தில் குறிப்பிடப்பட்டுள்ள அறிவுறுத்தல்களுக்கு ஏற்ப விடையளிக்கப்படாத சந்தர்ப்பங்களில் புள்ளிகள் வழங்கப்பட மாட்டாது;

(xi) ஒவ்வொரு வினாவிற்கும் விடையளித்து முடிந்த பின் விடையளித்த புத்தகத்திற்கு மேலதிகமாக எழுதிய தாள்களை பக்க இலக்கங்களின் ஒழுங்கில் இணைத்து இடதுபுற மேல்மூலையில் கழறாத வகையில் கட்டுதல்/இணைத்தல் வேண்டும். விடைப்பத்திரத்தைக் கையளிக்கும் முன் சகல விடைத்தாள்களும் இணைக்கப்பட்டுள்ளனவா என்பதனை உறுதிப்படுத்திக் கொள்ள வேண்டும். விடைப்பத்திரத்தைக் கையளித்த பின் பரீட்சை மண்டபத்திற்கு வெளியே கொண்டு செல்லப்பட்ட எந்தவொரு விடை எழுதிய தாளும் மதிப்பீட்டிற்கு உட்படுத்தப்பட மாட்டாது;

(xii) உங்கள் விடைத்தாளை பரீட்சை மேற்பார்வையாளரிடம் அல்லது பணிக் குழுவின் உத்தியோகத்தர் ஒருவரிடம் கையளித்தல் வேண்டும். விடைப்பத்திரங்களை சேகரிக்கும் வரை உங்களது ஆசனத்தில் அமர்ந்திருத்தல் வேண்டும். அவ்வாறு செய்வதற்குத் தவறுவதானது, சிலவேளை உமது விடைப்பத்திரம் காணாமல் போவதற்கும் நீர் ஏதாவது பாடத்திற்கு சமுகமளிக்கவில்லை என்று கருதுவதற்கும் காரணமாக அமையும்;

(xiii) ஏதாவது காரணத்துக்காக பரீட்சை மேற்பார்வையாளருடன் அல்லது பணிக் குழுவின் உத்தியோகத்தர் ஒருவருடன் கதைக்க வேண்டிய அவசியம் ஏற்படின், ஏனையவர்களுக்கு இடையூறு ஏற்படாத வகையில் மேசையில் இருமுறை தட்டுவதன் மூலம் சமிக்ஞை செய்தல் வேண்டும்.

பரீட்சைகள் ஆணையாளர் நாயகம்.

இலங்கைப் பரீட்சைத் திணைக்களம்,
பெலவத்தை,
பத்தரமுல்லை.

# பதவிகள் - வெற்றிடம்

## பதிவாளர் நாயகம் திணைக்களம்

*தமிழ் மொழி மூலம் பிறப்பு, இறப்பு மற்றும் விவாகம்/மேலதிக விவாகம் பதிவாளர் பதவி – திருகோணமலை மாவட்டம்*

*இங்கு கீழே அட்டவணையில் குறிப்பிடப்பட்ட பிரிவில் உள்ள பிறப்பு, இறப்பு மற்றும் விவாக பதிவாளர் பதவிக்காக விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன.*

*1. விண்ணப்பதாரர் உரிய பிறப்பு, இறப்பு மற்றும் விவாக பிரிவினுள் நிரந்தர வதிவிடதாரியாகவும் மற்றும் போதியளவான ஆதனத்திற்கு உரித்தான பிரதேசவாசிகளின் மதிப்பினைப் பெறும் ஆளுமையுடையவராகவும் இருத்தல் வேண்டும்.*

*2. இந்தப் பதவிக்காக ஆண்/பெண் இருபாலாரும் விண்ணப்பிக்க இயலும்.*

*3. விண்ணப்பம் கோரப்படும் இறுதி தினம், விண்ணப்பதாரின் வயது வருடங்கள் 30 இற்கு குறையாதிருத்தல் வேண்டும் என்பதுடன், வயது வருடங்கள் 55 இற்கு மேற்படாதிருத்தல் வேண்டும். (இளைப்பாற்றப்படும் உச்ச வயதெல்லை வயது வருடங்கள் 70 ஆகும்.)*

*4. விவாகப் பதிவாளர் பதவிக்காக விண்ணப்பிப்பவர்கள் விவாகமானவராக இருத்தல் வேண்டும் என்பதுடன் தாரமிழந்தவர் அல்லது விவாகரத்தானவராக இருத்தல் கூடாது.*

*5. பிரிவில் மக்களின் மொழித் தேவைக்கிணங்க இரண்டாம் மொழியில் கடமையினை மேற்கொள்ளும் இயலுமையுடன் இரண்டுக்கு மேற்படாத தவணைகளில் தமிழில் சிறப்பு சித்தி உட்பட க. பொ. த. (சா. த.) பரீட்சையில் குறைந்தது சிறப்புச் சித்திகள் இரண்டுடன் (02) ஆறு விடயங்களில் (06) சித்தி பெற்றிருத்தல் வேண்டும். அல்லது அதற்கு சமமான பரீட்சையில் சித்தி பெற்றிருத்தல் வேண்டும்.*

**கருத்திற் கொள்ளவும்.**– *க. பொ. த. (சா. த.) அல்லது அதற்கு சமமான பரீட்சையில் ஒரு விடயம் இரண்டு பகுதிகளாக சித்தியடைந்திருக்கும் சந்தர்ப்பங்களில், அது ஒரு விடயமாக கருதப்படல் வேண்டும். அந்த விடய பகுதிகள் இரண்டும் சித்தியடைந்திருந்தால் மாத்திரமே அவ்விடயம் சித்தியடைந்ததாக கருத்திற் கொள்ளப்படல் வேண்டும்.*

*6. பிரிவில் அனைவருக்கும் அல்லது அநேகமானவர்களுக்கு இலகுவாக நெருங்கக்கூடிய பிரிவின் மத்திய இடமொன்றில் அமைந்த பதவியின் கௌரவத்தினை பாதுகாக்கும் விதத்திலான கட்டிடத்தில் அலுவலகத்தினை அமைப்பதற்கும் இயலுமாயிருத்தல் வேண்டும்.*

*7. விண்ணப்பம் கோரப்படும் பிறப்பு, இறப்பு மற்றும் விவாகம்/ மேலதிக விவாகம் பதிவு செய்தல் பிரிவிற்கு உட்புகுத்தப்படும் கிராம பட்டியல்கள்/கிராம அலுவலர் பிரிவு, கல்வி மற்றும் ஏனைய தகைமைகள் ஆகிய மேலதிக விபரங்கள் கீழ்க் குறிப்பிடப்படும் அட்டவணையில் குறிப்பிடப்பட்ட மாவட்டச் செயலகம், பிரதேச செயலகம் அல்லது உரிய காணி மற்றும் மாவட்டச் செயலகம், கிராம அலுவலர் அலுவலகம், சமுர்த்தி அபிவிருத்திச் சங்க அலுவலகம் மற்றும் தபால் அலுவலகம் ஆகிய பிரிவின் பிரசித்தமான இடங்களில் காட்சிப்படுத்தப்பட்டுள்ள அறிவித்தல்களில் பார்த்துக்கொள்ள இயலும்.*

*8. இதற்காக தேவையான விண்ணப்பங்கள் மற்றும் கிராம பட்டியல்கள்/ கிராம அலுவலர் பிரிவுகள் உள்ளடங்கிய "இணைப்பு 1" உரிய மாவட்டத்தின் மாவட்டச் செயலாளர் (அரசாங்க அதிபர்) அலுவலகத்தில் மற்றும் உரிய காணி மற்றும் மாவட்டப் பதிவகத்தில் அல்லது பிரதேச செயலகத்தில் பெற்றுக்கொள்ள இயலும். விண்ணப்பம் பதிவாளர் நாயகம் திணைக்களத்தின் வெப் தளத்திலும்* (www.rgd.gov.lk) *பெற்றுக்கொள்ள இயலும்.*

*9. பூர்த்தி செய்யப்பட்ட விண்ணப்பங்கள் 2023, மாச்சு மாதம் 03 ஆந் திகதி அல்லது அதற்கு முன்பு அட்டவணையில் குறிப்பிடப்பட்ட முகவரிக்கு கிடைக்குமாறு பதிவுத் தபாலில் அனுப்புதல் வேண்டும்.*

*பீ. எஸ். பீ. அபேவர்தன,*
*பதிவாளர் நாயகம்.*

*பதிவாளர் நாயகம் திணைக்களம்,*
*இல. 234/A3, டென்சில் கொப்பேகடுவ மாவத்தை,*
*பத்தரமுல்லை,*
*2023, சனவரி 09.*

**அட்டவணை**

| *மாவட்டம்* | *பிரதேச செயலகப் பிரிவு* | *விண்ணப்பம் கோரப்படும் பிரிவும் பதவியும்* | *விண்ணப்பம் அனுப்பப்பட வேண்டிய முகவரி* |
|---|---|---|---|
| திருகோணமலை | மூதூர் | கொட்டியார் தெற்கு பிரிவின் பிறப்பு, இறப்பு மற்றும் கொட்டியார் பற்று பிரிவின் விவாக (பொது) பதிவாளர் பதவி (தமிழ் மொழி) | மாவட்டச் செயலாளர்/ மேலதிக பதிவாளர் நாயகம், மாவட்டச் செயலகம், திருகோணமலை |

*02-11*

---

# பரீட்சைகளும் பரீட்சைப் பெறுபேறுகளும் பிறவும்

## வெளிநாட்டு அமைச்சு

*வெளிநாடுகளிலுள்ள இலங்கைத் தூதரகப் பணியகங்களில், இலங்கையிலிருந்து நியமிக்கப்படும் தனிப்பட்ட உதவியாளர் பதவிகளுக்கான வெற்றிடங்களை நிரப்புவதற்கான மட்டுப்படுத்தப்பட்ட போட்டிப்பரீட்சை - 2021 (2023)*

வெளிநாடுகளிலுள்ள இலங்கைத் தூதரக பணியகங்களில், இலங்கையிலிருந்து நியமிக்கப்படும் தனிப்பட்ட உதவியாளர் பதவிகளுக்கான வெற்றிடங்களை நிரப்புவதற்காக, பரீட்சைகள் ஆணையாளரினால் 2023, ஏப்பிறல் கொழும்பில் நடைபெறவுள்ள போட்டிப் பரீட்சைக்காக, தகுதிவாய்ந்த அலுவலர்களிடமிருந்து விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன.

இது தொடர்பான விண்ணப்பம், இலங்கைப் பரீட்சைகள் திணைக்களத்தின் இணையத் தளமான, www.doenets.lk இலுள்ள "எமது சேவைகள்" என்னும் பகுதியின் கீழுள்ள "இணைய விண்ணப்பங்கள்- ஆட்சேர்ப்புப் பரீட்சைகள்" என்பதன் கீழ் வெளியிடப்பட்டுள்ளது. விண்ணப்பங்கள் இணையம் மூலமாக மட்டுமே சமர்ப்பிக்கப்பட வேண்டும். இணையம் மூலமான விண்ணப்பங்களை ஏற்றுக்கொள்ளுதல் 2023, பெப்புருவரி 6 அன்று காலை 9.00 மணிக்கு ஆரம்பமாகும்.

சமர்ப்பித்த பின்னர், அவ்விண்ணப்பத்தை தரவிறக்கம் செய்து, அச்சிடுவதுடன் அதிலுள்ள குறிப்பிட்ட சில பகுதிகளை, கையால் எழுதி நிரப்பி, விண்ணப்பதாரியின் கையொப்பம் அத்தாட்சிப்படுத்தப்பட்ட பின்னர், பொருத்தமாயின் நிறுவன தலைவரின் உறுதிப்படுத்தலுடன், அதை பதிவுத்தபாலில் த.பெ. இல: 1503, கொழும்பு" என்ற முகவரிக்கு, விண்ணப்ப முடிவுத் திகதி அன்றோ அல்லது அதற்கு முன்னரோ கிடைக்கக்கூடியதாக அனுப்புதல் வேண்டும். (விண்ணப்பத்தின் நகல் ஒன்றை விண்ணப்பதாரி தன்னுடன் வைத்திருப்பது உசிதமானது.) "வெளிநாடுகளிலுள்ள இலங்கைத் தூதரகப் பணியகங்களில், இலங்கையிலிருந்து நியமிக்கப்படும் தனிப்பட்ட உதவியாளர் பதவிகளுக்கான வெற்றிடங்களை நிரப்புவதற்கான மட்டுப்படுத்தப்பட்ட போட்டிப் பரீட்சை - 2021 (2023)" என்ற வாக்கியம், கடித உறையின் இடதுபக்க மேல் மூலையில் தெளிவாக எழுதப்பட்டிருத்தல் வேண்டும். கடித உறையின் இடது பக்க மேல் மூலையில் 2 செ. மீ × 2 செ. மீ. அளவுள்ள பெட்டிக்குள் 'P' என்ற ஆங்கில எழுத்து தெளிவாக எழுதப்பட்டிருத்தல் வேண்டும். இவ்விண்ணப்பத்திற்கான முடிவுத்திகதி 2023, மாச்சு 07 ஆந் திகதி ஆகும்.

**குறிப்பு**: விண்ணப்பத்தின் அச்சிடப்பட்ட நகல் கட்டாயமாக தபாலில் அனுப்பப்பட வேண்டும். அவ்விதம் தபாலில் அனுப்பப்பட்ட நகல் தொலைந்தது அல்லது தாமதமானது என்ற முறைப்பாடுகள் பின்னர் கருத்தில் கொள்ளப்படமாட்டாது. விண்ணப்ப முடிவுத் திகதி வரையில் தாமதமாக விண்ணப்பங்களை அனுப்புவதனால் ஏற்படும் இழப்புகளை விண்ணப்ப தாரிகளே ஏற்க வேண்டும்.

*2.* **தகைமை.-**

(அ) விண்ணப்பதாரர் இலங்கைப் பிரசையாகவும், திருமணமானவரெனில், வாழ்க்கைத் துணையும் இலங்கைப் பிரசையாக இருத்தல் வேண்டும்.

(ஆ) அரச முகாமைத்துவ உதவியாளர் சேவை, மாகாண அரச சேவை மற்றும் உள்ளூராட்சி சேவை, அரச கூட்டுத்தாபனங்கள்/ அரச வங்கிகள் மற்றும் ஏனைய நியதிச் சட்ட சபைகள் போன்ற பகுதிசார் அரசாங்க சேவைகளைச் சேர்ந்த நிரந்தர உத்தியோகத்தர்களாகவும், ஆங்கில சுருக்கெழுத்திலும் கணினிப் பிரயோகங்களிலும் திறமை வாய்ந்தவர்களாகவும் இருத்தல் வேண்டும்.

(இ) விண்ணப்ப முடிவுத் திகதியன்று வயது 57 வருடங்களுக்கு மேற்படக்கூடாது. (அதன்படி, 1966, மாச்சு 7 இற்குப் பின்னர் பிறந்தவர்கள் மட்டுமே விண்ணப்பிக்க தகுதியுடையவர்களாவர்).

(ஈ) குறைந்தது 05 வருடங்கள் நிரந்தரமானதும் செயற்றிறனுள்ளதும் திருப்திகரமானதுமான சேவையைப் பூர்த்திசெய்திருப்பதுடன், விண்ணப்ப திகதிக்கு உடனடியாக முந்திய ஐந்து வருடங்களுக்குள், உரிய திகதிகளில் சகல வருடாந்த சம்பள அதிகரிப்புக்களையும் பெற்றிருத்தல் வேண்டும்.

(உ) எச்சரிக்கை தவிர்ந்த வேறெந்த விதமான ஒழுங்காற்று தண்டனைகளுக்கும் ஆளாகியிருத்தல் கூடாது.

(ஊ) இலங்கை வெளிநாட்டு தூதரக பணியகங்களில் சேவையாற்றுவதற்கான தன் உதவியாளர்கள் வெற்றிடங்கள் 'ஒன்று' ஆக மட்டுப்படுத்தப்பட்டுள்ளது. ஆகையால் முன்னதாக வெளிநாட்டு தூதரக பணியகங்களில் தனிப்பட்ட உதவியாளராக பணியாற்றியோர், இந்த வர்த்தமானி அறிவித்தலின் கீழ் வெற்றிடங்களைப் பூர்த்திசெய்வதற்காக விண்ணப்பிக்க முடியாது.

**குறிப்பு** :

(i) தற்போது வெளிநாடுகளிலுள்ள இலங்கைத் தூதரகங்களில், சேவையாற்றுவோர் இதற்கு விண்ணப்பிக்கத் தகுதியற்றவர்களாவார்.

(ii) 02 (ஆ) இல் குறிப்பிட்ட சேவைகளில் ஒப்பந்த அடிப்படையிலோ, அமைய அடிப்படையிலோ அல்லது தற்காலிக அடிப்படையிலோ சேவையாற்றுபவர்கள் இதற்கு விண்ணப்பிப்பதற்குத் தகுதியற்றவர்களாவர்.

(iii) விண்ணப்பிப்பதற்குத் தகுதியுடையோர் மற்றும் ஆட்சேர்ப்பு முறையில் தெரிவுசெய்யப்படுவோர், வெளிநாட்டமைச்சுடனான முழு ஒப்பந்த காலம் உட்பட, தத்தமது நிறுவனங்களிலுள்ள தமது பதவிகளில் நிரந்தரமாகப் பணியாற்றுபவர்களாக இருத்தல் வேண்டும்.

3. **தெரிவு செய்யும் முறை**.- இப்பதவிக்கான தெரிவுகள் ; பரீட்சைகள் ஆணையாளர் நாயகத்தினால் நடாத்தப்படவுள்ள எழுத்துப் பரீட்சையின் அடிப்படையிலும், வெளிநாட்டமைச்சின் செயலாளரால் நியமிக்கப்பட்ட தரப்பினரால் நடத்தப்படவுள்ள நேர்முகத்தேர்வு ஆகியவற்றின் அடிப்படையிலும் மேற்கொள்ளப்படும்.

3.1 **எழுத்துப்பரீட்சை**.- எழுத்துப் பரீட்சை பின்வரும் வினாத்தாள்களை உள்ளடக்கியிருக்கும்:

| *பரீட்சை* | *காலம்* | *புள்ளிகள்* | *குறைந்தபட்ச புள்ளிகள்* |
|---|---|---|---|
| ஆங்கில சுருக்கெழுத்து | 1 மணித்தியாலம் | 100 | 40 |
| ஆங்கிலம் மற்றும் வணிகத் தொடர்பாடல் | 1 மணித்தியாலம் | 100 | 40 |

**குறிப்பு**:

i. **ஆங்கில சுருக்கெழுத்து**.- விண்ணப்பதாரிகள் ஆங்கில சுருக்கெழுத்து பரீட்சை ஒன்றில் பங்கேற்கவேண்டும், ஆங்கில மூலத்தில் மட்டுமே உள்ள இப்பரீட்சை, கொழும்பில் நடாத்தப்படும். இப்பரீட்சைக்கான சுருக்கெழுத்தின் வேகமானது, 'நிமிடத்திற்கு 60 சொற்கள்' ஆகவிருத்தல் வேண்டும். இந்த ஆங்கில சுருக்கெழுத்துப் பரீட்சைக்கு 100 புள்ளிகள் வழங்கப்படும்.

ii. **ஆங்கிலம் மற்றும் வணிக தொடர்பாடல்** .- இதில், கடிதங்கள்/குறிப்பாணைகள் எழுதுதல் மற்றும் கூட்டங்கள், அழைப்புகளுக்கான பிரமாணக் குறிப்புக்கள் எடுத்தல் போன்றவை தொடர்பான அறிவு மற்றும் இலக்கணம், புரிதல் ஆகியனவும் மதிப்பிடப்படும்.

3.2 **செயன்முறை மதிப்பீடு**

| | *காலம்* | *புள்ளிகள்* | *குறைந்தபட்ச புள்ளிகள்* |
|---|---|---|---|
| செயன்முறை மதிப்பீடு | 80 நிமிடங்கள் | 60 | 24 |

**குறிப்பு**: செயன்முறை மதிப்பீடானது; ஆங்கில மொழியில் கடிதம், குறிப்பாணைகள், அறிக்கைகள் அழைப்புகள் தயாரித்தல் மற்றும் மின்னஞ்சல் தொடர்பாடல் போன்றவற்றிலுள்ள தேர்ச்சி மற்றும் Ms Office ஐப் பயன்படுத்தும் திறன்கள் போன்றவற்றைப் பரீட்சிப்பதற்காக வடிவமைக்கப்பட்டிருக்கும்.

(ஒவ்வொரு வினாவுக்கும் 15 புள்ளிகள் வழங்கப்படும். மொத்தப் புள்ளிகள் 60) (15 ×4).

3.3 **நேர்முகத்தேர்வு**

3.3.1. வெளிநாட்டமைச்சின் செயலாளரால் நியமிக்கப்பட்ட குழு ஒன்றினால் நடாத்தப்படும் நேர்முகத் தேர்விற்கான புள்ளிகள் 40 ஆகும். இவ்வமைச்சினால் நடாத்தப்படும் நேர்முகத்தேர்வில் புள்ளிகள் வழங்கும் செயன்முறை பற்றிய விபரம் கீழே :

| இல. | புள்ளியிடல் திட்டம் | புள்ளிகள் | ஆகக்கூடிய புள்ளிகள் |
|---|---|---|---|
| 01 | **மேலதிக கல்வித் தகைமைகள்**<br>• பல்கலைக்கழகப் பட்டம் - 1 ஆம் வகுப்பு<br>• பல்கலைக்கழகப் பட்டம் - 2 ஆம் வகுப்பு மேல் பிரிவு<br>• பல்கலைக்கழகப் பட்டம் - 2 ஆம் வகுப்பு கீழ்ப் பிரிவு<br>• பல்கலைக்கழகப் பட்டம் சித்தி பெற்றிருத்தல்<br><br>**குறிப்பு**:<br>1. பல்கலைக்கழக பட்டத்தை ஆங்கில மூலத்தில் பூர்த்தி செய்திருத்தல் வேண்டும்.<br>2. பல்கலைக்கழக பட்டத்திற்கான காலம் 3 வருடங்களுக்குக் குறைவாக இருத்தல் கூடாது. | <br>05<br>04<br>03<br>02 | 05 |
| 02 | வெளிநாட்டமைச்சின் செயற்பாடுகளுடன் நேரடியாகத் தொடர்புடைய **பிற/ தொழில் ரீதியான தகைமைகள்** (சர்வதேச உறவுகள், சட்டம், ஆங்கிலம், வெளிநாட்டு மொழிகள், தகவல் தொழில்நுட்பம், மனிதவள முகாமைத்துவம், சந்தைப்படுத்தல் மற்றும் வணிக கற்கைகள் CIM, CIMA, AAT போன்றவை)<br><br>I. பட்டப்பின் டிப்ளோமா<br>II. டிப்ளோமா<br>III. சான்றிதழ் மட்டத்திலான கற்கைநெறி<br><br>(இத்தகைமையானது; அங்கீகரிக்கப்பட்ட பல்கலைக்கழகம், தொழில்நுட்பக் கல்லூரி அல்லது அரசாங்கப் பதிவு பெற்ற நிறுவகத்தில் ஆறுமாத காலத்திற்கு மேற்பட்ட அல்லது அதனையொத்த காலத்தை உள்ளடக்கியிருத்தல் வேண்டும்) | 10<br>07<br>05 | 10 |
| 03 | **சேவை அனுபவம்**<br>முதல் 5 வருடகால செயற்றிறன் வாய்ந்ததும் திருப்திகரமானதுமான சேவை தவிர்ந்த எஞ்சியுள்ள சேவைக் காலத்தின் ஒவ்வொரு வருடத்திற்கும் 0.25 புள்ளிகள். | வருடங்கள் × 0.25 | 10 |

| இல. | புள்ளியிடல் திட்டம் | புள்ளிகள் | ஆகக்கூடிய புள்ளிகள் |
|---|---|---|---|
| 04 | **நேர்முகத் தேர்வில் செயற்றிறன்**<br>• தொடர்பாடல் திறன்கள் மற்றும் ஆங்கில மொழித்திறன்<br>• சர்வதேச விவகாரங்களிலுள்ள அறிவு<br>• கலாச்சார உணர்திறன்<br>• நேர்மறை அணுகுமுறை<br>• ஆளுமை மற்றும் கையாளும் திறன் | <br>05<br><br>03<br>03<br>03<br>01 | 15 |
| | மொத்தம் | | 40 |

3.4 எழுத்துப் பரீட்சைக்கான இரண்டு வினாத்தாள்களிலும் 40% அல்லது அதற்கு மேற்பட்ட சதவீதப் புள்ளிகளைப்பெற்றவர்கள் செயன்முறை மதிப்பீடு மற்றும் நேர்முகத் தேர்விற்கு அழைக்கப்படுவர். இருப்பினும், எழுத்துப் பரீட்சையில் மேற்படி புள்ளியிடும் மட்டத்துடன் தகைமை படைத்த பரீட்சார்த்திகளின் எண்ணிக்கை போதியளவில் இல்லாதிருக்குமிடத்து, செயன்முறை மதிப்பீடு மற்றும் வாய்மொழித் தேர்வுக்கான பரீட்சார்த்திகளை அழைப்பதற்கான வெட்டுப்புள்ளி மட்டம் மீதான இறுதி முடிவைத் தீர்மானிக்கும் உரிமை வெளிநாட்டமைச்சின் செயலாளருக்கு உள்ளது. பரீட்சார்த்திகள் செயன்முறை மதிப்பீட்டில் குறைந்தது 40% புள்ளிகள் ($60 \times 40\% = 24$) பெற்றிருத்தல் வேண்டும். நேர்முகத் தேர்விற்கு குறைந்தபட்ச புள்ளி மட்டம் எதுவுமில்லை.

3.5 எழுத்துப்பரீட்சையில் பெற்ற மொத்த புள்ளிகளின் தகுதி வரிசையின் அடிப்படையில் தெரிவுசெய்யப்பட்ட விண்ணப்பதாரர்கள், செயன்முறை மதிப்பீடு மற்றும் நேர்முகத்தேர்வுக்கு அழைக்கப்படுவர். நேர்மகத்தேர்வின் போது விண்ணப்பதாரரின் தகுதியுடைமை மற்றும் தேவைப்படும் ஆவணங்களின் நம்பகத்தன்மை பரிசீலிக்கப்படும். செயன்முறைப் பரீட்சையானது, வெளிநாட்டமைச்சின் செயலாளரால் நியமிக்கப்பட்ட தரப்பினரால் நடாத்தப்படும். தெரிவுசெய்யப்படும் விண்ணப்பதாரிகள் பணிக்கு அமர்த்தப்படவுள்ள தூதரக பணியகம் பற்றியதிலான இறுதி முடிவு வெளிநாட்டமைச்சின் செயலாளரைப் பொறுத்ததாகும்.

3.6 பரீட்சையை நடாத்துதல் மற்றும் பெறுபேறுகளை வெளியிடுதல் தொடர்பில் பரீட்சைகள் ஆணையாளர் நாயகத்தின் தீர்மானமே இறுதியானதாகும்.

3.7 மேற்குறிப்பிட்ட பந்தி 3.4 இன்படி, தகைமைகளைப் பூர்த்திசெய்த பரீட்சார்த்திகளின் திறமை அடிப்படையில் பெற்ற மொத்தப் புள்ளிகளை உள்ளடக்கிய பெறுபேற்றுத் தாள், பரீட்சைகள் ஆணையாளர் நாயத்தினால் வெளிநாட்டமைச்சின் செயலாளருக்கு அனுப்பி வைக்கப்படும். கூடுதலாக, பரீட்சைப் பெறுபேறுகள் பரீட்சைக்குத் தோற்றிய ஒவ்வொரு பரீட்சார்த்திக்கும் நேரடியாக அனுப்பப்படும் அல்லது இலங்கை பரீட்சைகள் திணைக்கள இணையத்தளத்தில் (www.results.exams.gov.lk ) வெளியிடப்படும்.

3.8 தெரிவுசெய்யப்பட்ட பரீட்சார்த்திகளை வெளிநாட்டமைச்சில் பணிக்கமர்த்துவதற்கான கோரிக்கை விடுக்கப்படும் போது, பதவி நியமனம் பெற்றுள்ளோர் உரிய திகதியில் வெளிநாட்டமைச்சில் தமது கடமைகளைப் பொறுப்பேற்கவேண்டும். அலுவலரொருவர் அவ்வாறு செய்யத் தவறும் பட்சத்தில், அது பற்றி வெளிநாட்டமைச்சின் செயலாளருக்கு எழுத்து மூலமாக அறிவித்தல் வேண்டும். அத்துடன், பதவி நியமனம் பெற்றுள்ள திகதியிலிருந்து நான்கு வாரங்களுக்குள் வெளிநாட்டமைச்சில் கடமைக்கு சமூகமளிக்கத் தவறுவோர், குறித்த பதவி நியமனத்திற்குத் தகுதியற்றவர்களாகக் கருதப்படுவதுடன், செயலாளரின் தற்றுணிபின் பேரில் அவர்கள் மீது நடவடிக்கையும் எடுக்கப்படும். மேலும், தெரிவு செய்யப்பட்டோர், தமக்கான நியமனக் கடிதங்கள் கிடைத்த இரண்டு வாரங்களுக்குள் குறித்த நியமனத்தை தாம் ஏற்றுக் கொண்டுள்ளாரா, இல்லையா என்பதை வெளிநாட்டமைச்சின் செயலாளருக்கு அறிவிக்க வேண்டும். தவறும் பட்சத்தில் விண்ணப்பதாரர் குறித்த நியமனத்தை ஏற்றுக்கொள்ளவில்லை என்பதாகக் கருதி அதற்கேற்ற நடவடிக்கை எடுக்கப்படும்.

**4. விண்ணப்பிக்கும்முறை.-**

4.1 பரீட்சைக்கான இணைய விண்ணப்பம் ஆங்கிலத்தில் மட்டுமே பூர்த்தி செய்யப்படுதல் வேண்டும். விண்ணப்பதாரியால் இணையத்தில் சமர்ப்பிக்கப்பட்ட மென்பிரதியும், பதிவுத்தபாலில் அனுப்பப்பட்ட

அச்சிடப்பட்ட பிரதியும் பரீட்சைகள் திணைக்களத்திற்கு கிடைத்ததும், இரண்டும் உறுதிப்படுத்தப்பட்ட பின்னர், அவர்களது விண்ணப்பம் ஏற்றுக்கொள்ளப்பட்டதா/ இல்லையா என்பது, அவர்கள் கணினி முறைமை அணுகலுக்காகப் பயன்படுத்தப்பட்ட கையடக்க தொலைபேசி இலக்கத்திற்கு ஒரு குறுந்தகவல் மூலமாகவோ அல்லது மின்னஞ்சல் மூலமாகவோ அறிவிக்கப்படும். இணைய விண்ணப்பத்தை பூர்த்தி செய்வதற்கு முன்னர், விண்ணப்பதாரிகள் "அறிவுறுத்தல்கள்" என்பதை தரவிறக்கம் செய்து, அதில் உள்ளவற்றைக் கண்டிப்பாகப் பின்பற்றியே விண்ணப்பத்தைப் பூர்த்தி செய்தல் வேண்டும். விண்ணப்பம் அச்சிடப்பட்ட பின்னர் மேற்கொள்ளப்படும் எந்த திருத்தங்களும், செல்லுபடியான மாற்றமாக கருதப்படாது. பூர்த்தியடையாத விண்ணங்கள் எந்த அறிவிப்புமின்றி நிராகரிக்கப்படும்.

4.2 வெளிநாடுகளில் பணிபுரியும் விண்ணப்பதாரரின் தகுதி மற்றும் விண்ணப்பத்தில் கொடுக்கப்பட்டுள்ள விபரங்களின் சரியான தன்மை குறித்து திணைக்களத் தலைவரின் பரிந்துரை மற்றும் ஒப்புதலுடன் அந்தந்த திணைக்களத் தலைவர்கள் ஊடாக விண்ணப்பங்கள் அனுப்பப்படுதல் வேண்டும். சம்பந்தப்பட்ட அலுவலர் தெரிவுசெய்யப்படும்பட்சத்தில் அவர் உடனடியாக தற்போதைய பதவியிலிருந்து விடுவிக்கப்படுவார் என்பதையும் திணைக்களத் தலைவர் குறிப்பிடுதல் வேண்டும். பூர்த்தியடையாத விண்ணப்பங்கள் நிராகரிக்கப்படும். முடிவுத் திகதிக்குப் பின்னர் கிடைக்கப்பெறும் விண்ணப்பங்கள் ஏற்றுக்கொள்ளப்படமாட்டாது.

5. **பரீட்சைக் கட்டணம்.-**

(அ) பரீட்சைக்கான கட்டணம் ரூ.600.00 ஆகும். இணைய முறையால் வழங்கப்படும் பின்வரும் கட்டண முறைகள் மூலம் மட்டுமே பணம் செலுத்தப்படுதல் வேண்டும் :

(i) ஏதேனும் ஒரு வங்கி கடன் அட்டை;
(ii) இணைய பரிவர்த்தனை வசதிகள் கொண்ட ஏதேனும் ஒரு வங்கி கடன் அட்டை ;
(iii) இலங்கை வங்கி இணைய வங்கி முறை;
(iv) இலங்கை வங்கியின் எந்தவொரு கிளை ;
(v) தபால் திணைக்களத்தின் எந்தவொரு தபால் கந்தோர்

**குறிப்பு**.-

(அ) மேற்படி முறைகள் மூலம் கட்டணங்கள் மேற்கொள்ளுதல் பற்றிய அறிவுறுத்தல்கள், பரீட்சைகள் திணைக்கள இணையதளத்தின் பரீட்சைகளுடன் தொடர்புள்ள தொழில்நுட்ப அறிவுறுத்தல்களின் கீழ் வெளியிடப்பட்டுள்ளன.

(ஆ) கட்டணம் கிடைக்கப்பெற்றமை தொடர்பாக, குறுஞ்செய்தி அல்லது மின்னஞ்சல் மூலம் அறிவிக்கப்படும். பரீட்சைக் கட்டணத்தின் மொத்தமும் செலுத்தப்படுவதுடன், அதற்குக் குறைவான அல்லது அதிகமான கட்டணங்களுடனான விண்ணப்பங்கள் நிராகரிக்கப்படும். மேற்குறிப்பிட்ட முறைகளின் மூலம் பரீட்சைக் கட்டணங்கள் செலுத்தும்போதும் ஏற்படக்கூடிய எந்தவித தவறுகளுக்கும் பரீட்சைகள் திணைக்களம் பொறுப்பாகாது.

(இ) எந்தவொரு சூழ்நிலையிலும் இந்தப் பரீட்சைக் கட்டணம் மீளளிக்கப்படமாட்டாது அல்லது வேறொரு பரீட்சைக்காக மாற்றப்படமாட்டாது.

6. **பரீட்சைக்குத் தோற்றுவதற்கான அனுமதி.-**

6.1 இந்த வர்த்தமானி அறிவித்தலில் குறிப்பிட்ட தகைமைகளைக் கொண்டவர்கள் மட்டுமே விண்ணப்பித்துள்ளனர் என்ற அனுமானத்தில், இந்த அறிவித்தலில் குறிப்பிட்ட வயது எல்லைக்குள் அடங்குகின்ற, முடிவுத் திகதியன்றோ அல்லது அதற்கு முன்னரோ பரீட்சைக் கட்டணத்தைச் செலுத்தி, அதற்கான ரசீதுடன் பூர்த்தி செய்யப்பட்ட விண்ணப்பங்களை சமர்பிக்கின்ற, அனைத்து விண்ணப்பதாரிகளுக்குமான அனுமதி அட்டைகள் பரீட்சைகள் ஆணையாளர் நாயகத்தினால் அனுப்பி வைக்கப்படும். அனுமதி அட்டைகள் விண்ணப்பதாரர்களுக்கு அனுப்பி வைக்கப்பட்டதும் அது பற்றி பத்திரிகைகளிலும் பரீட்சைத் திணைக்களத்தின் உத்தியோகபூர்வ இணையத்தளத்திலும் வெளியிடப்படும். பத்திரிகைகளில் பிரசுரிக்கப்பட்டு இரண்டு அல்லது மூன்று நாட்களுக்குள் பரீட்சைக்கான அனுமதி அட்டைகள் கிடைக்கப்பெறாதவர்கள், பரீட்சைத் திணைக்களத்தின், "ஒழுங்குபடுத்தல் பரீட்சைகள் நிறுவன கிளையில் விசாரித்தல் வேண்டும்.

பரீட்சைத்திணைக்களத்தில் விசாரிக்கும் போது விண்ணப்பத்தின் உறுதிப்படுத்தப்பட்ட நகல்கள் மற்றும் காசுக்கட்டண பற்றுச்சீட்டு, பதிவுத்தபாலின் பற்றுச்சீட்டு ஆகியவற்றை உங்களுடன் வைத்திருப்பது உதவும் என்பதுடன், விண்ணப்பித்த பரீட்சையின் பெயர், உங்களின் முழுப்பெயர், தே. அ. அ. இலக்கம் மற்றும் முகவரி ஆகியவற்றையும் குறிப்பிடுதல் வேண்டும். வெளி மாவட்டங்களைச் சேர்ந்த விண்ணப்பதாரர்களெனில், விசாரணைகளை ஒரு கடிதத்தில் எழுதி, அதில் ஒரு தொலைநகல் இலக்கத்தையும் குறிப்பிட்டால் அந்தத் தொலை நகல் இலக்கத்தைக் குறிப்பிட்டு பரீட்சைக்கான அனுமதி அட்டை அனுப்பி வைக்கப்படும்.

6.2 அனுமதி அட்டையில் இடப்படும் விண்ணப்பதாரரின் கையொப்பமானது அத்தாட்சிப்படுத்தப்பட்டிருத்தல் வேண்டும். நிறுவனமொன்றில் பணியாற்றும் பரீட்சார்த்தி தனது கையொப்பத்தினை நிறுவனத் தலைவரிடமோ அல்லது அத்தகைய நிறுவனத் தலைவர் சார்பாக கையொப்பமிடுவதற்கென அதிகாரமளிக்கப்பட்டுள்ள வேறெந்த அலுவலரிடமோ அத்தாட்சிப்படுத்திக்கொள்ளுதல் வேண்டும். முதல் சந்தர்ப்பத்தில் பரீட்சைக்குத் தோற்றும் போது, பரீட்சார்த்தி தனது கையொப்பம் அத்தாட்சிப்படுத்தப்பட்ட தனது அனுமதி அட்டையை பரீட்சை நிலைய மேற்பார்வையாளரிடம் சமர்ப்பித்தல் வேண்டும். அனுமதி அட்டையைச் சமர்ப்பிக்காதவர்கள் பரீட்சைக்குத் தோற்றுவதற்கு அனுமதிக்கப்படமாட்டார்கள்.

6.3 விண்ணப்பதாரர் ஒருவர் தனக்கென ஒதுக்கப்பட்ட பரீட்சை மண்டபத்திலேயே பரீட்சைக்குத் தோற்ற வேண்டும். விண்ணப்பதாரர்கள் பின்பற்ற வேண்டிய விதிகள் இவ்வர்த்தமானியில் பிரசுரிக்கப்பட்டுள்ளன. பரீட்சார்த்திகள் பரீட்சை ஆணையாளர் நாயகத்தின் விதிகள் மற்றும் ஒழுங்கு விதிகளுக்குக் கட்டுப்படுவர். இவைகளை மீறும் விண்ணப்பதாரர்கள் பரீட்சை ஆணையாளர் நாயகத்தினால் விதிக்கப்படும் தண்டனைகளுக்கு ஆளாக நேரிடும்.

6.4 பரீட்சைக்கான அனுமதி அட்டை விண்ணப்பதாரருக்கு வழங்கப்படுவதன் மூலம் விண்ணப்பதாரர் பரீட்சைக்கான தகைமைகள் எல்லாவற்றையும் பூர்த்தி செய்துள்ளாரென எவ்வகையிலும் கருதப்படலாகாது.

6.5 விண்ணப்பத்தின்போது குறிப்பிடப்படும் விண்ணப்பதாரரின் பதவி மற்றும் வேலைத்தளம் போன்ற விபரங்கள், இப்பரீட்சை தொடர்பான சகல தொடர்பாடல்களிலும் இயைபுள்ளதாயிருக்கும். விண்ணப்பத்தை அனுப்பிய பின்னர் கோரப்படும் எந்த மாற்றங்களும் கருத்தில் கொள்ளப்படமாட்டாது.

**7. தவறான தகவல்களை வழங்குவதற்கான தண்டனை.-**

7.1 விண்ணப்பதாரிகள் விண்ணப்பப் படிவத்தில் சரியான தகவல்களை வழங்குவதில் மிகவும் கவனமாக இருத்தல் வேண்டும். பரீட்சார்த்தி இப்பரீட்சைக்குத் தோற்றுவதற்குரிய தகைமையைக் கொண்டிருக்காதவரென வெளிப்படத்தப்படுமிடத்து, இப்பரீட்சையின் விதிகள் மற்றும் நெறிமுறைகளின்படி, பரீட்சைக்கு முன்னரோ, பரீட்சையின்போதோ அல்லது பரீட்சைக்குப் பின்னரோ பரீட்சார்த்தியின் விண்ணப்பம் நிராகரிக்கப்படலாம். விண்ணப்பதாரி சமர்ப்பித்த விபரங்களில் ஏதேனுமொன்று தவறானது என கண்டுபிடிக்கப்படும் பட்சத்தில், அவர் அரசாங்க சேவையிலிருந்து எந்த நேரமும் பணி நீக்கம் செய்யப்படலாம்.

**8. பரீட்சார்த்தியின் ஆளடையாளம்.-**

8.1 ஒவ்வொரு பரீட்சைக்குத் தோற்றும்போதும், பரீட்சை மண்டபத்தில் மேற்பார்வையாளர் திருப்தியடையும் வகையில் பரீட்சார்த்தி, தனது ஆள் அடையாளத்தை நிரூபித்தல் அவசியம். இதற்காக, பின்வரும் ஆவணங்கள் ஏற்றுக்கொள்ளப்படும்:-

(அ) தேசிய ஆளடையாள அட்டை;
(ஆ) செல்லுபடியாகும் கடவுச்சீட்டு;
(இ) செல்லுபடியாகும் இலங்கை வாகன ஓட்டுநர் அனுமதிப்பத்திரம்.

8.2 விண்ணப்பதாரிகள் பரீட்சை மண்டபத்தில் நுழையும்போது, தமது ஆள் அடையாளத்தை நிரூபிக்கும் வகையில் தமது முகத்தையும் காதுகளையும் மூடக்கூடாது. அத்துடன், தமது ஆள் அடையாளத்தை நிரூபிப்பதற்கு ஒத்துழைக்க மறுக்கும் எந்தவொரு பரீட்சார்த்தியும் பரீட்சை மண்டபத்தினுள் நுழைவதற்கு அனுமதிக்கப்பட மாட்டா. பரீட்சார்த்திகள் தமது அடையாளத்தை மேற்பார்வையாளர்கள் இனங்காணும் வகையில், தாம் பரீட்சை மண்டபத்தினுள் நுழைந்தது முதல் அங்கிருந்து வெளியேறும் வரை, தமது முகத்தையும், காதுகளையும் மூடாமல் இருத்தல் வேண்டும்.

**9. நியமன விதிமுறைகள்.-**

9.1 தெரிவு செய்யப்பட்ட அலுவலரொருவர் வெளிநாட்டு தூதரக பணியகம் ஒன்றில் பதவியில் அமர்த்தப்படுவதற்கு முன்னர், கொழும்பில் உள்ள வெளிநாட்டு அலுவல்கள் அமைச்சில் குறிப்பிட்ட காலத்திற்கு சேவையாற்றுமாறு வேண்டப்படுவார். ஒரு சுயாதீன அமைப்புடன் இணைந்து அமைச்சின் பிரிவுகளின் தலைவர்களால்

மேற்கொள்ளப்படும் மதிப்பீடுகளின்படி, வெளிநாட்டமைச்சிலான ஆரம்ப சேவைக் காலப் பகுதியில் அவரது வேலை மற்றும் நடத்தை திருப்திகரமற்றது என கண்டறியப்படின், அவரது நியமனம் இரத்துச் செய்யப்படலாம். அமைச்சிலான சேவைக்காலமானது, அமைச்சின் தேவைகளைப் பொறுத்து மாற்றியமைக்கப்படலாம்.

9.2 வெற்றிடங்களின் எண்ணிக்கை, அந்தந்த தூதரக பணியகங்களின் தேவைகள் மற்றும் அலுவலரின் தகுதி மற்றும் (வெளிநாட்டு மொழிகளிலுள்ள) திறமை ஆகியவற்றின் அடிப்படையில் பதவி நியமனங்கள் தீர்மானிக்கப்படும். அத்துடன், அத்தகைய பதவி நியமனங்களைத் தீர்மானிப்பத்தில் குறித்த அலுவலரின் தனிப்பட்ட தேவைகளை (பிள்ளைகளின் கல்வி முதலியன) கருத்திற் கொள்வதற்கான எதுவித கடப்பாடும் அமைச்சிற்குக் கிடையாது. அத்துடன், முற்றிலும் தேர்வுப் பரீட்சைகள் மூலமாகப் பெறப்பட்ட தகைமையின் அடிப்படையில் தான் பதவி வெற்றிடங்களைப் பூர்த்திசெய்யவேண்டுமென்ற கடப்பாடும் அமைச்சிற்கு இல்லை. தனக்கொதுக்கப்பட்ட தூதரகப் பணியக நியமனத்தினை அலுவலர் ஒருவர் ஏற்றுக்கொள்ள மறுக்கும் பட்சத்தில், அந்த நியமனம் இரத்துச் செய்யப்பட்டதாகக் கருதப்படுவதுடன், அது தொடர்பில் மேற்கொள்ளப்படும் எந்த முறையீடுகளும் ஏற்றுக்கொள்ளப்படமாட்டாது. இப்பரீட்சையின் செல்லுபடியாகும் மற்றும் நியாயமான தெரிவு அளவுகோல்களை உறுதிப்படுத்துவதற்காக அந்த அலுவலர் மீண்டும் பரீட்சைக்குத் தோற்றி, முன்னைய பரீட்சையில் பின்பற்றிய அதே நடைமுறைகளை எதிர்கொள்ளவேண்டும்.

9.3 வெளிநாட்டு இலங்கைத் தூதரக பணியகத்தில் நியமனம் பெற்றுள்ள அலுவலரொருவர், பொதுவாக வெளிநாட்டமைச்சின் செயலாளரால் நிர்ணயிக்கப்பட்ட நியதிகள் மற்றும் நிபந்தனைகளுக்கேற்ப, வெளிநாட்டில் மூன்று வருட காலப்பகுதிக்கு சேவையாற்றுமாறும் அதற்கேற்ப உடன்படிக்கையொன்றில் கைச்சாத்திடுமாறும் வேண்டப்படுவார். சேவையின் தேவை கருதி இக்காலப்பகுதி நீடிக்கப்படலாம்.

9.4 அரசாங்க சேவையிலுள்ள (அரசாங்க முகாமைத்துவ உதவியாளர்கள் சேவை/ மாகாண அரசாங்க சேவை/ உள்ளூராட்சி சேவை) அலுவலர்கள் தெரிவு செய்யப்படின், அவர்களுக்கு தற்போதைய சம்பள அளவுத்திட்ட அடிப்படையில் சம்பளம் வழங்கப்படும். ஏனையோருக்கு மாதமொன்றுக்கு நிலையான சம்பளமாக ரூபா 32,290.00 வழங்கப்படும். அத்துடன், வெளிநாட்டு இலங்கைத் தூதரக பணியகங்களில் சேவையாற்றும் காலப்பகுதியில் தற்போதுள்ள விதிகள் மற்றும் ஒழுங்கு விதிகளின்படி பொருத்தமான வெளிநாட்டுப் படியொன்றும் வழங்கப்படும்.

9.5 அரசாங்கத்திற்கும் வெளிநாட்டு இலங்கைத் தூதரக பணியகமொன்றில் நியமனம் செய்யப்படும் அலுவலருக்கும் இடையில் கைச்சாத்திடப்பட்ட உடன்படிக்கையில் குறிப்பிட்டுள்ளவாறு, தெரிவுசெய்யப்பட்ட அலுவலர், அவரது வாழ்க்கைத்துணை, மற்றும் 21 வயதிற்குட்பட்ட அலுவலரில் தங்கியுள்ள அதிகபட்சம் இரண்டு பிள்ளைகள் ஆகியோருக்கு மட்டுமான இருவழி விமானச் சீட்டுக்கள், தங்குமிடம் மற்றும் ஏனைய வசதிகள் படிகள் போன்ற, வெளிநாட்டமைச்சின் செயலாளரால் தீர்மானிக்கப்பட்ட செலவுகளை அரசாங்கம் ஏற்றுக்கொள்ளும். மேற்குறிப்பிட்டோர் தவிர்ந்த வேறெந்த குடும்ப உறுப்பினரும் உடன் செல்வதற்கான கோரிக்கைகளை இவ்வமைச்சு ஏற்றுக்கொள்ளாது.

9.6 கடமைக் காலம் பூர்த்தியடைந்ததும் குறிப்பிட்ட அலுவலர் இலங்கைக்கு கட்டாயமாகத் திரும்புதல் வேண்டும்.

10. இப்பரீட்சையில் தோற்றிய தகைமை வாய்ந்த விண்ணப்பதாரிகளைக் கொண்டு சகல அல்லது பகுதியான வெற்றிடங்களைப் பூர்த்தி செய்வதோ அல்லது வெற்றிடங்களை பூர்த்தி செய்யாமல் விடுவதோ தொடர்பாக, வெளிநாட்டமைச்சின் செயலாளர் எடுக்கும் தீர்மானமே இறுதியானதாகும்.

11. சிங்களம், தமிழ் மற்றும் ஆங்கில மொழிகள் மூலமான இந்த அறிவித்தல்களில் ஏதேனும் முரண்பாடுகள் இருப்பின், சிங்கள அறிவித்தலே மேலோங்கியிருக்கும்.

அருணி விஜேவர்த்தன,
செயலாளர்.

வெளிநாட்டு அலுவல்கள் அமைச்சு,
குடியரசுக் கட்டிடம்,
கொழும்பு 01,
2023, பெப்புருவரி 3.

02-39

# வர்த்தமானி வெளியீடு சம்பந்தமான முக்கிய அறிவித்தல்

இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானி சாதாரணமாக வெள்ளிக்கிழமை தோறும் வெளியிடப்படும். வெள்ளிக்கிழமை அரசாங்க விடுமுறை நாளாக இருப்பின் அதற்கு முந்திய வேலை நாளில் வர்த்தமானி வெளியிடப்படும். வர்த்தமானிக்குரிய அறிவித்தல்கள் ஏற்றுக்கொள்ளப்படும் இறுதி நாளும் அந்த வாரத்தில் ஏற்படும் அரசாங்க விடுமுறை நாட்களைப் பொறுத்து மாற்றப்படும்.

இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானி பிரசுரமாகும் திகதிகளும் அவ்வவ் வர்த்தமானிகளுக்குரிய அறிவித்தல்கள் ஏற்றுக்கொள்ளப்படும் இறுதி நாளும், நேரமும் கீழ்க் குறிப்பிடப்பட்டிருக்கும் அட்டவணையில் காட்டப் பட்டுள்ளன. கீழே குறிப்பிடப்பட்டுள்ள நேரங்களுக்குப் பிந்திக் கிடைக்கும் அறிவித்தல்கள் எல்லாம் பிரசுரிக்கப்படமாட்டா. இனி வரப்போகும் இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானியில் பிரசுரிக்க விரும்பின் அதற்குரிய மாற்றங்கள் செய்து திருப்பி அனுப்புதற் பொருட்டு விலாசதாரருக்கு தபால் மூலம் அனுப்பி வைக்கப்படும். இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானியில் குறிப்பிடப்பட்ட திகதிகளிலே அறிவித்தல்களைப் பிரசுரிக்க விரும்புவோர் அறிவித்தல்கள் தபால் மூலம் அரசாங்க அச்சுத் திணைக்களத்துக்கு வந்துசேரப் போதிய அவகாசம் கொடுப்பது எல்லோருடைய நன்மைக்கும் உகந்ததாய் இருக்கும்.

**அரசாங்க அழுத்தகர் வர்த்தமானிக்குரிய சந்தாப் பணங்களை ஏற்றுக்கொள்வார்.**

**முக்கிய கவனிப்பு**.- இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானி விளம்பரங்களுக்கான கட்டணங்கள் யாவும் **அரசாங்க அழுத்தகரினால் ஏற்றுக்கொள்ளப்படும்**.

**அட்டவணை - 2023**

| | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|
| **பெப்புருவரி** | .. | வெள்ளி | 03.02.2023 | .. | நண்பகல் 12 | வெள்ளி | 20.01.2023 |
| | | வெள்ளி | 10.02.2023 | .. | நண்பகல் 12 | வெள்ளி | 27.01.2023 |
| | | வெள்ளி | 17.02.2023 | .. | நண்பகல் 12 | வெள்ளி | 03.02.2023 |
| | | வெள்ளி | 24.02.2023 | .. | நண்பகல் 12 | வெள்ளி | 10.02.2023 |
| **மாச்சு** | .. | வெள்ளி | 03.03.2023 | .. | நண்பகல் 12 | வெள்ளி | 17.02.2023 |
| | | வெள்ளி | 10.03.2023 | .. | நண்பகல் 12 | வெள்ளி | 24.02.2023 |
| | | வெள்ளி | 17.03.2023 | .. | நண்பகல் 12 | வெள்ளி | 03.03.2023 |
| | | வெள்ளி | 24.03.2023 | .. | நண்பகல் 12 | வெள்ளி | 10.03.2023 |
| | | வெள்ளி | 31.03.2023 | .. | நண்பகல் 12 | வெள்ளி | 17.03.2023 |
| **ஏப்பிறல்** | .. | வியாழன் | 06.04.2023 | .. | நண்பகல் 12 | வெள்ளி | 24.03.2023 |
| | | புதன் | 12.04.2023 | .. | நண்பகல் 12 | வெள்ளி | 31.03.2023 |
| | | வெள்ளி | 21.04.2023 | .. | நண்பகல் 12 | வியாழன் | 06.04.2023 |
| | | வெள்ளி | 28.04.2023 | .. | நண்பகல் 12 | புதன் | 12.04.2023 |

**கங்கானி லியனகே,**
அரசாங்க அழுத்தகர்.

அரசாங்க அச்சுத் திணைக்களம்,
கொழும்பு 8,
2023 ஆம் ஆண்டு சனவரி மாதம் 02 ஆந் திகதி.

இலங்கை அரசாங்க அச்சுத் திணைக்களத்திற் பதிப்பிக்கப்பெற்றது.